Registered as a News paper　　பக்கங்கள் 06　　விலை ரூபா 5:00

# ஈழநாதம்

THE EELANAATHAM　மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025　　பங்குனி 25　　(7.4.94)　　வியாழக்கிழமை　　ஓசை 48

## யாழ். போதனாமருத்துவமனையில் 'எயிட்ஸ்' நோய் பரிசோதனை

யாழ். போதனா மருத்துவ மனையில் 'எயிட்ஸ்' நோயைக் கண்டுபிடிப்பதற்கான பரிசோதனைகள் விரிவுபடுத்தப்படவுள்ளது. 'எயிட்ஸ்' நோயைக் கண்டறிவதற்கான ''இறோனடயரெஸ்ட்'' எனப்படும் பரிசோதனை மருத்துவ மனையின் 33 ஆம் இலக்க அறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்குத் தேவையான மருந்துப் பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக பயிற்சியைப் பெற்று யாழ் திரும்பிய திரு. பாலசுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார். இது வரை காலமும், இரத்ததானம் செய்பவர்களுக்கும், எயிட்ஸ் நோயினால் (6ஆம் பக்கம் பார்க்க)

# விமானப்படையை அரசு நவீன மயமாக்க முடிவு!

## சிரேஷ்ட அதிகாரி ஒருவர் நியமனம்

[கொழும்பு]

**விமானப் படையை விரைவில் நவீனப் படுத்தும் முயற்சியில்சிறிலங்கா அரசாங்கம் தீவிர அக்கறை காட்டி வருகின்றது இதன் பொருட்டு விமானப் படையின் சிரேஷ்ட அதிகாரிகளின் தளபதியாக நேற்று முதல் ஒருவரை நியமனமும் செய்துள்ளது**

வடக்கு - கிழக்கில் நடைபெற்று வரும் போரில் விமானப் படையின் பங்களிப்பு தேவை என்றும், அதன் பங்களிப்பைப் பொறுத்தே யுத்தத்தின் வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்படும் எனவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களிலும், அரசாங்க வட்டாரங்களிலும் கருதப்படுகின்றது.

இந்நிலையிலேயே விமானப் படையை நவீனப்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் இறங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சிறிலங்கா கடற்படையை நவீனமாக்கும் முயற்சியில் நீர்மூழ்கிக் கப்பல்களை விரட்டும் கப்பல்கள் உட்பட நான்கு போர்க்கப்பல்களை கொள்வனவு செய்திருப்பது தெரிந்ததே.

சிறிலங்கா விமானப்படையில் சுப்பர்சொனிக் விமானங்கள் உட்பட பீரங்கி பொருத்தப்பட்ட உலங்கு வானூர்திகள் உள்ளன. இவற்றை விட ரஷ்யாவிடம் இருந்து எம். ஐ. - 17 ரக உலங்கு வானூர்திகளையும் சிறிலங்கா கொள்வனவு செய்துள்ளது.

இந்நிலையிலும், எதிர்காலத் தேவைக்கென விமானப் படையை நவீனப்படுத்துவதோடு பலப்படுத்தவும் வேண்டுமெனவும் அரசாங்கத் (5 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



கப்டன் பெருவளவன் [வில்லியம்]

(யாழ்ப்பாணம்)

இடைக்காட்டுப் பகுதியில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த கப்டன் பெருவளவன் | வில்லியம் (கனகசபாபதி ஸ்ரீதரன் கல்வடி, மட்டக்களப்பு) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது

## மாத்தளை நகரசபையில் ஐ.தே.கவிற்குள் பிளவு

### நகரசபைத் தலைவர் ராஜினாமா

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாணத்தலைவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையைத் தொடர்ந்து மாத்தளை நகரசபைத் தலைவர் உட்பட ஆறு நகர சபை உறுப்பினர்கள் கட்சியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளனர். இவர்கள் தமது இராஜினாமாவை கட்சியின் பொதுச்செயலாளர் சிறிசேனகுரேயிடம் சமர்ப்பித்துள்ளனர்.

மாத்தளை நகரசபைத் (6 ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு

## தேசியத் தலைவர் பிரபாகரனின் பரிசில் பெறும் மாணவர் விபரம்

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில் தேசிய, கோட்ட மட்டங்களில் கூடுதல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் வழங்கும் பணப் பரிசுகளும், சான்றிதழ்களும், கல்வி மேம்பாட்டுப் பேரவையினரின் சான்றிதழ்கள், பதக்கங்கள் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. இப்பரிசில்களை பெறும் மாணவர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இப்பரீட்சையில் தேசியமட்டத்தில் முதல் 10 இடங்களை பெற்றோர் விபரம் வருமாறு:

சிவதர்சினி -சிவசுப்பிரமணியம், வேம்படி மகளிர் கல்லூரி ஆறுமுகம் தேவராஜா- வெஸ்லிதேவசுதன், ஹாட்லிக் கல்லூரி, குகாஜினி - தில்லைநாதன், வேம்படி மகளிர் கல்லூரி, சுந்தரலிங்கம் - காந்தரூபன், பரியோவான் கல்லூரி சுதந்திரபாலன் -கௌரிசங்கர் யாழ். இந்துக் கல்லூரி, சிவசுப்பிரமணியம்-சிவசாம்பவன் யாழ், இந்து கல்லூரி, நாகசந்திரா - கீர்த்தனன் பரியோவான் கல்லூரி. பாலச்சந்திரன் - பாலமுரளி, பரியோவான் கல்லூரி, ஷயாணி-திருஞானசம்பந்தன், சுண்டுக்குளி, மகளிர் கல்லூரி, கௌரி-நவரத்தினசோதி, மெதடிஸ்த பெண்கள் உயர்தர பா:

மேலும் கோட்ட மட்டத்தில் முதல் இரு இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு:

நல்லூர் கோட்டம்

உகைபிரகாசம் -ஜெயதீபன் யாழ். இந்துக் கல்லூரி, மகாலிங்கம் - அறிவழகன் யாழ். இந்துக் கல்லூரி,

யாழ் கோட்டம்

பாமினி - தர்மலிங்கம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மன் பாணியில் தேர்தல் சுதந்திரக்கட்சி விருப்பம்

(கொழும்பு)

எதிர்காலத்தில் தேர்தல்களை ஜேர்மன் பாணியில் நடத்தலாம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளது. ஜேர்மன் நாட்டில், ஐம்பது சதவிகித ஆசனங்கள் விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையிலும் ஐம்பது சதவிகித ஆசனங்கள் தொகுதிவாரி பிரதிநிதித்துவ அடிப்படையிலும் நிரப்பப்படுவதாகவும், அந்த முறையை சிறிலங்காவிற்கும் அறிமுகப்படுத்தலாமெனவும் சுதந்திரக் கட்சி அரசுக்கு ஆலோசனை கூறியிருப்பதாக கட்சியின் பொதுச் செயலாளர் தர்ம சிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட மட்ட உறுப்பினர்கள் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படலாமெனவும், ஏனையோர் விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்யப்படலாமெனவும் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் ஜேர்மன் முறை அமுல் செய்யபடுமானால் அதற்காக தொகுதி மற்றும் மாவட்டங்களின் எல்லைகள் மீளமைப்பு செய்யப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

## வடமேல் மாகாணசபை கலைக்க முயற்சி

(கொழும்பு)

மேற்படி கருத்தை பிரதமர்

## ஐ. தே. க. வினுள் பெரும் பிளவு

...உட்பட நான்கு போர்க்கப்பல்களை கொள்வனவு செய்திருப்பது தெரிந்ததே.

...ந்து மாத்தளை நகரசபைத் தலைவர் உட்பட ஆறு நகரசபை உறுப்பினர்கள் கட்சி...

...ப்பித்துள்ளனர்.

மாத்தளை நகர சபைத...

(6 ஆம் பக்கம் பார்க்க)

...பெருவளவன்! விலியம் (கனகசபாபதி சிறீதரன் கன்னடி, மட்டக்களப்பு) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

...மாவட்டங்களின் எல்லைகள் மீளமைப்பு செய்யப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களை ஒரேநாளில் நடத்துவது பற்றி அவரிடம் கேட்கப்பட்டபோது பொருளாதார ரீதியாக இது பயனுடையதே என்றும் அதிலும் நன்மை, தீமை இரண்டும் உண்டு என்றும் தெரிவித்தார்.

# ஐ. தே. க வினுள் பெரும் பிளவு ஓட்டுப் போடுவதில் ஜே. ஆர். தீவிரம்

(கொழும்பு)

தென்மாகாணசபை தோல்வியை அடுத்து ஐ.தே.கவிற்குள் பெரும் பிளவு தோன்றுவதற்கான சாத்தியக்கூறுகள் வலுத்து வருவதாக ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இம்மோதலின் பலியாடாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவே இலக்கு வைக்கப்பட்டுள்ளார் என கட்சி வட்டாரங்கள் கூறுவதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

ஐ.தே. கட்சியினுள் ஏற்பட்டுவரும் பிளவு பெரிதாகாமல் தடுப்பதில் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன் பேச்சுக்களை நடாத்தி வருகிறார்.

தென் மாகாண சபை தேர்தல் தோல்விக்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கையாண்ட அரசியல் வழிமுறைகளே காரணம் என கட்சியினுள் கண்டனங்கள் தெரிவிக்கப்படுகிறது. இக் குற்றச்சாட்டுகளை சில அமைச்சர்களே சுமத்தியும் வருகின்றனர். முன்னாள் ஜனாதிபதி

(5 ஆம் பக்கம் பார்க்க)

# ஒத்துழைப்பு தேவையானால் கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள்

## அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

'எனது கட்சியின் ஒத்துழைப்பு தொடர்ந்து ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடைக்க வேண்டுமாயின் எனது கோரிக்கைகளுக்கு அக் கட்சி செவிசாய்த்து தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறானால் மட்டுமே தொடர்ந்து ஒத்துழைப்பை எனது கட்சி வழங்கும்' என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செள. தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஐ. தே. க - இ. தொ. கா முறிவடைந்துள்ள உறவு நிலையை மீள சீர் செய்யும் முகமாக சில சிரேஷ்ட அமைச்சர்கள் முயற்சி மேற்கொண்டபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதாவது மத்திய மாகாண சபை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கிய அமைச்சருக்கு மீண்டும் அமைச்சர் பதவி வழங்கப்படவேண்டும். இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமியையும் அவர்களின் சகபாடியான எட்டு மத்திய மாகாண சபை உறுப்பினர்களையும் பதவி நீக்கம் செய்து அவர்களின் இடத்திற்கு,வேறு இ.தொ.கா உறுப்பினர் நியமிக்கப்பட வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி கூறியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இதே வேளை மத்திய மாகாண சபையைச் சேர்ந்த எட்டு உறுப்பினர்கள் நேற்று நண்பகல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை பாராளு

(5 ஆம் பக்கம் பார்க்க)

# பிரேமதாசா நினைவாக மேதினம் துக்கநாள்

(கொழும்பு)

இந்த ஆண்டின் மே தினப் பேரணியை நடத்துவதில்லை என்று ஐ.தே.க முடிவு செய்துள்ளது. கடந்த ஆண்டில் மே தினப் பேரணியில் கொலையுண்ட முன்னாள் அதிபர் பிரேமதாசாவை நினைவு கூரும் முகமாக ஆயிரம் பாடசாலை சிறார்களுக்கு இலவச சீருடையும், ஆயிரம் இளம் பிக்குகளுக்கு இலவசமாக காவியுடையும் இத்தினத்தன்று வழங்குவதெனவும், நாடு முழுவதும் இத்தகைய வைபவங்கள் நடத்தப்படுமெனவும் ஐ.தே.க செயற்குழு கூறியுள்ளது.

இது பற்றி பி. பி. ஸியின் கொழும்பு முகவர் சியாகோநூசு குறிப்பிடுகையில் முன்னாள் அதிபர் பிரேமதாசவின் ஜனரஞ்சகக் கொள்கைகளின் பால் ஐ. தே. க திடீரெனத் திரும்புவதையே இது காட்டுகின்றது எனவும் தெரிவித்தார்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

# நரோமா பயணிகள் சமூகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

நரோமா கப்பலில் பிரயாணம் செய்யவிருக்கும் பிரயாணிகள் இன்று மதியம் 12.00 மணிக்கு பருத்தித்துறை இறங்கு துறைக்கு தவறாது சமூகம் அளிக்கும்படி மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (தி)

# புக்காரா நோட்டம்

(தென்மராட்சி)

கிளாலி, அலிப்பளை கடற் கரைப் பகுதிகளில் சிறிலங்கா விமானப்படை ''புக்காரா'' விமானமொன்று குத்திப் பதிந்து எழுந்ததினால் அப் பகுதியில் நின்ற பயணிகள் பதற்றமடைந்தனர். எனினும் பயணம் தொடர்ந்து நடைபெற்றது.

நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் இச் சம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மே நாள் கருத்தரங்கு

மே நாள் விடயம் தொடர்பாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை10 00மணிக்கு யாழ். மாவட்ட அரசியல் துறை பணிமனையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கருத்தரங்கில் அனைத்து அரசகூட்டுறவு தனியார் துறை தொழிற்சங்கங்களது பிரதிநிதிகளும் துறைசார் சங்கங்களினது பிரதிநிதிகளும் கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் கோரியுள்ளார்.

# கலைக்க முயற்சி

(கொழும்பு)

வடமேல் மாகாண சபையைக் கலைத்து அதற்கு மீண்டும் தேர்தல் ஒன்றை நடத்துவதன் மூலம் தென்மாகாண சபையில் ஐ.தே.க. அடைந்த தோல்வியை மக்களிடம் இருந்து நீக்க முடியும் என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் டி. பி. விஜேதுங்கவிற்கு ஆலோசனை கூறியுள்ளனர்.

மேற்படி கருத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, பொதுச்செயலாளர் சிறிசேன குரே ஆகியோர் கண்டிமையாக எதிர்த்துள்ளதாகவும் இதில் தோல்வியை கட்சி தழுவினால் எதிர்காலத்தில் கட்சியை கட்டியெழுப்புவது மிகவும் கடினமானதாக இருக்கும் எனவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

# யாழ். பல்கலை கணனித்துறைக்கு அமெரிக்க நிபுணர் வரத் தடை

(யாழ்ப்பாணம்)

அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் கணனித்துறை நிபுணர்ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கு எடுத்த முயற்சிகளுக்கு சிறிலங்கா அரசு தடை விதித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் கணனித்துறை மாணவர்களுக்கு இத் துறை சார்ந்த விரிவுரைகளை நடாத்தும் பொருட்டு குறிப்பிட்டகாலத்திற்கு இப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றுவதற்காக இவர் யாழ்ப்பாணத்திற்கு வருவதற்கு முயற்சித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்துக்கும் குறிப்பிட்ட அமெரிக்கப் பல்கலைக் கழகத்துக்கும் இடையில்உள்ள தொடர்பின் காரணமாக மேற்படி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அமெரிக்கப் பல்கலைக் கழகத்தின் மேற்படி கணனி நிபுணரின் யாழ்ப்பாண வருகைக்கான சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்த நிலையில் சிறிலங்கா அரசின் தடை உத்தரவு காரணமாக கணனி நிபுணரின் வருகை கைவிடப்பட்டுள்ளது. (ச)

# கட்சியினரின் எதிர்ப்பால் காமினிக்கு பதவி இல்லை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியினுள் எழுந்த கடுமையான எதிர்ப்பின் காரணமாகவே காமினி திசாநாயக்காவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் அமைச்சு பதவியும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவினால் வழங்க முடியாமல் போனதாக தெரியவருகின்றது.

தற்பொழுது கட்சியில் ஏற்பட்டுள்ள உட்பூசலானது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவையே ஓரம் கட்டும் அளவு வலுப் பெற்றுள்ளதாகவும் இதனால் ஜனாதிபதி தான் தன்னிச்சையாக முடிவு எதையும் எடுக்க முடியாததின்டாடுவதாகவும் இதற்கு காரணம் கட்சிக்குள்ளே பல குழுக்கள் பிரிந்து செயல் படுவதாகும் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இந்த நிலை தொடர்ந்து சென்றால் கட்சியில் ஜனாதிபதியின் நிலை கூட கவலைக்கு இடமாக மாறக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் எனவே கட்சி தொடர்ந்து பிளவுபடாது இயங்குவது என்பது ஓர் கேள்விக்குறியான விடயமாகத்தான் இருக்கும் என எதிர்பார்க்கின்றார்கள்

# லண்டன் பெண்மணி தாண்டிக்குளத்தில் கைது

லண்டனிலிருந்துகொழும்பு ஊடாக யாழ்ப்பாணம் வரமுயன்ற பெண் ஒருவர் தாண்டிக்குளம் தடை முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி பெண்ணிடம் தலைவர் திரு. வே. பிரபாகரன், விடுதலைப் புலிகள் உறுப்பினர்களின் படங்கள் அடங்கிய புத்தகமொன்று இருந்ததாக கூறப்படுகிறது.

சுமார் 40 வயது மதிக்கத்தக்க இப் பெண்ணின் பெயர் விபரங்கள் அறியவரவில்லை.

## வரி விளம்பரம்

### தேவை

சகலவிதமான வீடியோ செற், ரேப் செற் வகைகள், டெக், கமறா மற்றும் எலெக்றோனிக் பொருட்களை நியாய விலை கொடுத்து வாங்கப்படும். தொடர்புகளுக்கு மின்வளம் இல.8 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-8985)

### புறோயிலர் கோழிக் குஞ்சு விற்பனைக்கு

1 நாள் புறோயிலர் கோழிக்குஞ்சு உடன் விற்பனைக்குண்டு. ஆஷா கோழிப்பண்ணை 1-ம் கட்டை, பிரதான வீதி பருத்தித்துறை- (7940)

### தவறிவிட்டது

மார்க்கண்டு வேலாயுதம் பிள்ளையின் அடையாள அட்டை, குடும்ப அட்டை, மகன் கோபாலபிள்ளையின் சாதகக் குறிப்பு, இன்னோர் குறிப்பு தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்; ம: வேலாயுதம் பிள்ளை, பொற்கொடி வீடு. கோப்பாய் தெற்கு, கோப்பாய். (7954)

### SPECIAL ENGLISH

விரிவான விளக்கத்துடன் ஆரம்பத்திலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது ஆரம்பம்; 8-4-94 காலை 7 மணிக்கு V. N. KANDASAMY 87, திருநெல்வேலி றோட், (றயில் கடவைக்கு அண்மையில்) கொக்குவில். (7959)

### விற்பனைக்கு

சுத்த இன பொமரேனியன் 1 1|2 மாதம் நிரம்பிய நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. பூச்சி நீக்கப்பட்டது செல்வம், 107, டேவிற் வீதி, பெரிய தபாற்கந்தோர் அருகாமை யாழ்ப்பாணம்.
(7960)

### விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

திலகமக்கள் தங்கியுள்ள யாழ்-புகையிரத நிலைய முகாமில் (வீரபன் குடியிருப்பு) இயங்கும் 'வனிதா, பாலர் பாடசாலை சிறார்களுக்கான விளையாட்டுப்போட்டி 11-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு குடியிருப்புமைதானத்தில் நடைபெறும். (22)

### யாழ்ப்பாணம் வந்துள்ளனர்

(வடமராட்சி)

அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் சிலர் யாழ் வந்துள்ளனர். ஒயூடெக் நிறுவனத்தைச்சேர்ந்த மூன்று பிரதிநிதிகளும் உலக தரிசன நிறுவனத்தைச் சேர்ந்த இருவரும் வந்தனர்.

இவர்கள் ஒருவாரமளவில் இங்கு தங்கியிருந்து தமது வேலைத் திட்டங்களை பார்வையிடுவர்.

ஒயூடெக்கைச்சேர்ந்தறேண விக்லியம், ஸ்ரீபன் அன்ரன், பேர்ட் றெற்றவேட் ஆகியோரும் உலக தரிசனத்தைச் சேர்ந்த ஜி டி. ரெலஸ், அலக்ரூட் ஆகியோரே வந்தவர்களாவர். (மோ)

# A|L 96

## கலை - வர்த்தக பிரிவுகள்

### ஆரம்பம்:- 9-4-94

சனி காலை 8 மணி

| | |
|---|---|
| பொருளியல்:- | மகேந்திரன் |
| கணக்கியல்:- | SAM |
| வர்த்தகம்:- | தேவா |
| அளவையியல்:- | சோதி |
| இந்துநாகரிகம்:- | அருள்நங்கை |
| தமிழ்:- | குழந்தை |
| அரசியல்:- | கியூபேட் |
| புவியியல்:- | குணராசா |
| இந்துசமயம்:- | அருள்நங்கை |
| | கிரிதரன் |

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 96

### கலை வர்த்தகம்

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | வரதராஜன் |
| அளவையியல் | - | S. S. மனோகரன் |
| வர்த்தகம் | - | பசீல் |
| கணக்கியல் | - | செவந்தி |
| தமிழ் | - | மீரா |
| இந்துநாகரிகம் | - | பாலா |
| புவியியல் | - | பிரபல ஆசிரியர் |
| கிறிஸ்தவம் | - | நிரஞ்சன் |
| இந்துசமயம் | - | தாஸ் |
| அரசியல் | - | பஞ்சாட்சரம் |
| நாடகமும் அரங்கியலும் | - | சிவா |

**ஆரம்பம்: 9-4-94** சனி காலை 9.00 மணி

(சி-9038)

உ

## அகில இலங்கைக் கம்பன் கழகம் வழங்கும்

# மகரயாழ் விருது - 1994

எமது கழகத்தால் ஆண்டுதோறும் வழங்கப்படும் ''மகரயாழ் விருது'' இவ் வாண்டு நடுப்பகுதியில் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் வழங்கப்படவுள்ளது. இவ்விருதுக்குரியவரைத் தேர்ந்தெடுப்பதில் வழமை போல மக்கள் கருத்து அறியப்படவுள்ளது.

இவ் விருதுக்குத் தெரிவு செய்யப்படுபவருக்கு ரூபா இருபத்தையாயிரம் (25,000|-) கொண்ட பணமுடிச்சும், தங்கப் பதக்கமும், வெள்ளியிலான மகரயாழ் விருதும் முதல்நாள் கம்பன் விழாவில் வழங்கப்படும்.

தாம் சார்ந்த துறையினூடு தியாக உணர்ச்சியோடும், இனப்பற்றோடும், மனிதாபிமானத்தோடும் இம் மண்ணுக்காகத் தொண்டாற்றி, எமது இளைய தலைமுறைக்கு முன்னுதாரணமாக வாழ்ந்துகொண்டிருக்கும் ஒருவரையே இவ் விருதுக்காகத் தேர்ந்தெடுப்பதென எமது கழகம் முடிவு செய்துள்ளது.

இத்தகைய சான்றோரின் பெயர் விபரங்களைப் பொதுமக்களும், சமூக நிறுவனங்களும் சிபார்சு செய்து கீழ்க்கண்ட எமது முகவரிக்கு எதிர்வரும் 1994-04-30க்கு முன்னர் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

சிபார்சுகள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேற்புறத்தில் 'மகரயாழ் விருதுக்கான சிபார்சு - 1994' எனக் குறிப்பிடவும்.

விருது பற்றிய இறுதியான முடிவு கழக அறிஞர் குழுவினால் தீர்மானிக்கப்படும்.

நன்றி,

"கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்"

## நினைவு கூருகின்றோம்...

### 1994-04-07

1985-ம் ஆண்டு இதேதினத்தில் வவுனியா-கனகராயன்குளப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். அசோக்** (சரவணமுத்து வன்னியசிங்கம் - 1-ம் படிவம், சேமமடு-வவுனியா)

1986-ம் ஆண்டு மட்டு - நெடுச்சிமுனைப்பகுதியில் சிறிலங்கா புலனாய்வுப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**தூர்த்தி** (தம்பிப்பிள்ளை கருணாகரன்-நெச்சிமுனை-மட்டு)

1989-ம் ஆண்டு கிளி-இரணைமடுப்பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் விழுப்புண் அடைந்து யாழ்-வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும்போது தேசவிரோதசக்திகளினால் கொலை செய்யப்பட்ட,

**டிவ்விகனேஸ்** (சின்னையா கணேசன்-நுணாவில் மேற்கு, சாவகச்சேரி-யாழ்)

1991-ம் ஆண்டு மட்டு - புலுட்டைமானோடையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**தனு-பானு** (-- -- கல்லடி-மட்டு)

**நாகேந்திரன்-சதா** (- மட்டு)

**தேவிராஜ்** (-- -- ஈச்சந்தீவு-மட்டு)

யாழ்-குப்பிளானில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ஞானம்** (மணிவம் வீரசிங்கம் - சாவடிச்சேனை வெருகல்-திருமலை)

**சுமன்** (கணபதிப்பிள்ளை குவேந்திரராசா - ஆலங்கேணி - திருமலை)

மட்டு-அக்கரைப்பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த

**2-ம் லெப். மது** (சின்னத்தம்பி சுரேன்-பாண்டிருப்பு, கல்முனை- அம்பாறை)

அம்பாறை-சின்னவத்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் மினிமுகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**கப்டன் சங்கர்** (முருகேசு நடேஸ்-முனைத்தீவு' பெரியபோரதீவு-மட்டு)

**ஆனந்தகுமார்** (சோமசுந்தரம் மகாலிங்கம்-முனைக்காடு, கொக்கட்டிச்சோலை-மட்டு)

கிளி-ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண் அடைந்திருந்த நிலையில் வீரச்சாவெய்திய

**மைக்கல்** (அன்ரனி ஜெபநேசன் ஜீவநாயகம்-மிருசுவில் வடக்கு, கொடிகாமம்,-யாழ்)

வாகரையில் சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ஈஸ்வரன்** (அருளானந்தன் ஈஸ்வரதாஸ்-கிளிவெட்டி, மூதூர்-திருமலை)

மட்டு-தாண்டியடிப்பகுதியில் சிறிலங்கா இராணுவம் மற்றும் தேசவிரோதசக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். கிருபா** (செல்லத்தம்பு ராமச்சந்திரன்- புதூர்-மட்டு)

**கேசவன்** (-- - மூதூர், புதூர்-மட்டு)

1992-ம் ஆண்டு மட்டுநகர்ப்பகுதியில் பாம்புகடித்தலில் எமைப்பிரிந்த,

**பிறேமன்** (இராசையா-தேவதாஸ்-திருக்கோயில், பழுகாமம்-மட்டு)

1993-ம் ஆண்டு கிளாலிக்கடற்பரப்பில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் பலியான கிளிநொச்சியைச் சேர்ந்த 2 பொதுமக்கள்.

இந்துசமயம்:- அருள் நங்கை
கிரிதரன்
வரலாறு:- ஸ்ரீதரன்
கிறிஸ்தவசமயம்:- அருட்சகோதரர்

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளச் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி 9032)

நன்றி;
**"கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்"**
தி. திருநந்தகுமார் — தலைவர்
க. குமாரதாசன் — செயலர்
**அகில இலங்கை கம்பன் கழகம்**
'கம்பன் கோட்டம்'
300, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(கி-9030)

தாக்குதலில் பலியான இனிதொச்சியைச் சேர்ந்த 2
பொதுமக்கள்,
ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்,
**தமிழீழ விடுதலைப் புலிகள்**
(கி-9022)

# ★ 96 A/L கணித-விஞ்ஞான வகுப்புக்கள் ★

## NEW SCIENCE HALL
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
**ஆசிரியர் குழு**

இரசாயனவியல்:
திரு. சிவசுப்பிரமணியம் B. Sc (Hons)
பௌதிகவியல்:
திரு. S. சோதிலிங்கம் B. Sc (Special)
தாவரவியல்:
திரு. V.S குணசீலன் B. Sc (Special)
விலங்கியல்:
திரு. தம்பிராஜா B.Sc (Hons) Dip in Ed
தூய | பிரயோக கணிதம்
திரு. குணசிங்கம் B.Sc, Dip in Ed

## NEWSCIENCEACADEMY
எழிலகம் முன்பாக யாழ்ப்பாணம்.
**ஆசிரியர் குழு**

இரசாயனவியல்
திரு. A. மகாதேவா B.Sc(Hons) DipinEd
பௌதிகவியல்
திரு S.J கணேசன் B. Sc (Eng)
தாவரவியல்
திரு. V. S குணசீலன் B. Sc (Special)
விலங்கியல்
திரு. சண்முகநாதன் B. Sc (Hons)
தூய | பிரயோக கணிதம்
திரு. P. வெக்டர் வேலாயுதம் B. Sc (Hons)

**புதியவகுப்புக்கள் 9.4.94 சனி முதல் ஆரம்பமாகவுள்ளன**
**விண்ணப்பங்கள் யாவும் 8-4-94 [வெள்ளி] வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்**
(கி-9031)

# ARE THESE YOUR NEEDS?

*From this year the Statistics Branch of the Tamil Eelam Economic Development Organisation has expanded their activities in a large scale.*

(1) Surveys regarding a village for those interested in the development of this Village.

(2) Surveys on a particular social section.

(3) Surveys on consumer satisfaction on a particular product.

*Could be provided with consultancy service for undertaking such surveys, or could undertake a complete survey and provide you a survey report The Statistics Branch of the Tamil Eelam Economic Development Organisation with consultants who have many years of experience in this field are now available for such services. In addition, we supply required statistics for*

Research personnels for writing research reports
University students

School Teachers, Students and Others.

We are also in a position to prepare and provide survey reports on required subject to Government and Non-Government Social Service Organisations.

*For further information, please contact*

**STATISTICS BRANCH,**
Tamil Eelam Economic Development Organisation,
Thavady.

(கி-9029)

# முரண்பாட்டை மறைக்கும் முயற்சியே ஐ.தே.கவின் செயற்குழு கூட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சி தலைவருக்கும் பொதுச் செயலாளருக்கும் இடையே பாரிய கருத்து முரண்பாடுகள் இருப்பதாகவும் இதனை மூடி மறைப்பதற்கான ஓர் நடவடிக்கையே இச் செயற்குழுக் கூட்டமும், பாராளுமன்ற உறுப்பினர் கூட்டமும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அடுத்த சில மாதங்களில் இக் கருத்து வேறுபாடு பூதாகரமாக வெடிக்குமென்றும் இது கட்சிக்கு ஆபத்தான ஒரு சூழ் நிலையை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் மக்கள் ஐக்கிய தேசிய கட்சியை நம்புவது வெகுவாக குறைந்து வருவதாகவும் இதனால் கட்சியின் எதிர்காலம் மிகவும் மோசமான ஓர் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் கட்சி கட்டத்தினரால் மக்கள் கட்சியை நம்பமாட்டார்கள் எனவும் அரசியல் அவதானிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## பரீட்சை ஒழுங்கு

ஆங்கில தேசிய தராதரப் பரீட்சையின் ii-ம் பாகத்திற்குத் தோற்றுவதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காகக் கொழும்புக்குச்செல்ல வேண்டியதில்லை. இப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் பின்னொரு தேதியில் நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளைப் பரீட்சை ஆணையாளர் மேற்கொண்டுள்ளார் என பிரதிக் கல்விப் பணிப்பாளர் துரை தியாகராசா அறிவித்துள்ளார்.

# 200 குடும்பங்களுக்கு இலவச திருமணப்பதிவு

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்த நிலை மக்கள் நலன் காக்கும் கழகத்தினால் நிலகத்தைச் சேர்ந்த 200 குடும்பங்களுக்கு "இலவச திருமணப் பதிவு செய்து வைக்கும் வைபவம்" இம்மாதம் 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு அத்தியடியில் உள்ள கழகப் பணிமனையில் கழகத் தலைவர் திரு: வ. ஐயாத்துரை தலைமையில் நடைபெறும். விடுதலைப் புலிகளின் நிவகக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. செம்மணன் ஆரம்பித்து வைக்கவுள்ள இவ் வைபவத்தில் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி இளம்பரிதி பிரதம விருந்தினராக கலந்து கொள்வார் இவ் வைபவம் சென்ற மாதம் (மார்ச்) 20ஆம் திகதி நடைபெறவிருந்தது தவிர்க்க முடியாத காரணங்களால் பின் போடப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (22)

## முத்தமிழ் விழா

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் விழா இன்று வியாழக்கிழமை காலை எட்டு மணி தொடக்கம் கலாசாலையின் இரதிலக்குமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பேராசிரியர் கா. சிவத்தம்பி பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் நாட்டார் பாடல்கள் பற்றி பேராசிரியர் அ. சண்முகதாஸும், பழந்தமிழ் நூல்களில் ஆசிரியர் பற்றி க. சொக்கலிங்கமும், ஆசிரியத்தொழிலும் பெண்களும் பற்றி திருமதி கோகிலா மகேந்திரனும் கருத்துரைகள் வழங்கவுள்ளனர் பிற்பகலில் கவியரங்கமும், சிறப்புரையும் இடம் பெறவுள்ளன.

# 10வது ஆண்டு நினைவில்



## அமரர் தம்பையா சிதம்பரநாதபிள்ளை

[இணுவையூர் த. சிதம்பரநாதன்]

தோற்றம்: 24-08-1925

மறைவு: 29-03-1984

திதி: 07-04-94

"தணிகாசலம்"
உடுவில் வீதி,
மருதனார்மடம்,
சுன்னாகம்.

தங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
ச. சிதம்பரவல்லி,
தி. சிதம்பரசுப்ரமணியன்
தி. சிதம்பரவானதி

(7956)

# 6-ம் மாத நினைவஞ்சலி



உதயம்: 03-03-73

வீரச்சாவு: 11-11-93

## கடற்புலி லெப். சமுத்திரன்

(சந்திரசேகரம்பிள்ளை குமார்)

செந்தமிழ் ஈழம் தன்னில் அன்னியரின் கொடுமை கண்டு
தாயினும் மேலான தாயகத்தைக் காக்க
மூவாறு வயதிலே வரிப்புலியாய் பொங்கி எழுந்தாய்
அன்று நீ எழுதிய வாசகம் எம் மனதில் அழியாத ஓவியம்
என் பின் போராட்டத்துக்கு பின் தொடருங்கள் என்னும் ஓவியம்
தரைப்புலியாகி பின்னர் கடற்புலியாகி - நீ
எம் தலைவன் இடத்து கட்டைக் காட்டில் பெற்ற பரிசு - உன்
வீரத்தின் மேன்மை அன்றோ சமுத்திரா!
அன்று நீங்கள் நாகதேவன் துறையில் செய்த தியாகம் பெரியது மறவேங்களே
ஆனால் உன்னை காணாது தவிக்கின்றோம்
உன் அழகிய தோற்றம் எம் இதயத்தை கிள்ளுகிறது
உனது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

சிவகாமி அம்மன் கோவிலடி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

அம்மா, சகோதரர்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

(7953)

# இமையாணன் கிராமத்தில் கொலரா பரவும் அபாயம்

(பருத்தித்துறை)

கரவெட்டிப் பிரதேசத்திலுள்ள இமையாணன் கிராமத்தில் கொலரா நோய் தொற்றும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் கொலரா நோயினால் ஒருவர் பலியாகியுள்ளார். மூவர் கொலரா நோயினால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனையடுத்து பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் இமையாணன் கிராமப் பகுதியில் கொலரா நோய்த்தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது. கொலரா நோய் கண்ட குடும்ப உறுப்பினர்களுக்கு தடுப்பு மருந்துகள் வழங்கும் நடவடிக்கைகள் கிணறுகளுக்கு குளோரின் போடும் நடவடிக்கைகள், கொலரா நோய்த்தடுப்பு பற்றிய பிரசார நடவடிக்கைகள் என்பனவற்றைச் சுகாதாரத் திணைக்களத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். கரவெட்டிப்பகுதியில் உள்ள கொற்றாவத்தைக் கிராமத்திலும் ஏற்கனவே கொலரா நோயினால் இறப்புக்கள் நிகழ்ந்ததும் சுமார் 15 பேர் வரை நோயினால் பீடிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்ததும் குறிப்பிடத்தக்கது இப்பகுதியில் பருத்தித்துறை சுகாதாரத் திணைக்களத்தினர் மேற்கொண்ட கொலரா நோய்த் தடுப்பு துரித நடவடிக்கைகளினால் அக்கிராமத்தில் கொலரா நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இன்றைய நிலையிலே கொலரா நோய் வேகமாகப் பரவக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதால் இந் நிலையைத் தடுப்பதற்கு மக்கள் சுகாதாரப் பழக்க வழக்கங்களை மிகக் கடுமையாகக் கைக்கொள்ள வேண்டுமென சுகாதாரத் திணைக்களத்தினர் பொது மக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர். (25)

## நிர்வாகிகள் தெரிவு

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை, பாடசாலை அபிவிருத்திச் சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை பிற்பகலில் மேற்படி பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. ஏ. வி. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோகத்தர் தெரிவில், திரு. ஏ. வி. கணேசலிங்கம் (அதிபர்) தலைவராகவும், திரு. வீ. ஜெயரத்தினம் செயலாளராகவும், திரு. எஸ். திருஞானசம்பந்தர் (ஆசிரியர்) பொருளாளராகவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

வேலணை கிழக்கு மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் நடப்புவருட நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது. இதில் தலைவராக திரு த. குமாரசாமி, உபதலைவராக திருமதி ச. சிவனடியான், செயலாளராக திரு. அ.

# தென் மாகாண உறுப்பினர் இருவர் பதவி ஏற்க மறுப்பு

(கொழும்பு)

தென் மாகாண சபையின் [illegible]

பினர்கள் தமது பதவிகளை ஏற்க மறுத்து வருகின்றனர்.

காலி மாவட்டத்திற்கு ஒரு [illegible]

# 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 24 · 11 · 1963

இறப்பு 15 · 03 · 1988

செல்வி

## நவரட்ணம் லோகேஸ்வரி

(தேவி)

திதி:- 07 - 04 - 1994

தேவி உன் வாய் மொழி கேட்டு
வாழ்ந்திருந்தோம்
தேவி உன் கருவிழி கண்டு
பெருமையுற்றிருந்தோம்
தேவி உன் கார்குழல் பார்த்து
குளிர்ச்சியடைந்திருந்தோம்
தேவி உன் திருமேனி கண்டு
தேறியிருந்தோம்
தேவி உன் பிரிவுத் துயர்
தாங்காது தவிக்கின்றோம்.

தனங்கிளப்பு, ... குடும்பத்தினர்

# ஆறாம் மாத நினைவஞ்சலியும்

## ஆறாம் மாத நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
24 - 08 - 1968

வீரச்சாவு
11 - 11 - 1993

**ஜெப். இளவரசி (கலா)**
**(செல்லையா கலாநிதி)**

திதி: 07-04-1994

அன்புச் செல்வமே!
அறிவின் ஒளிவிளக்காய்
பண்பின் இருப்பிடமாய்
பாசமிகு மகளாய்
அன்புச் சகோதரியாய்
எம்முடன் வாழ்ந்தாய் - இம்
மண்ணின் விடிவிற்காய்
தவளை நடவடிக்கையில்
விதைக்கப் பட்டவளே

இந்நாளில் உம்முடன் வீரகாவியம் படைத்த வீர வேங்கைகள் அனைவருக்கும் எமது இதயஅஞ்சலிகள்.

என்றும் உம் நினைவுடன்

33/1, ஜெயந்திநகர், கிளிநொச்சி.
(7877)

ஐயா, அம்மா, சகோதர சகோதரிகள், உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள்.

---

தென் மாகாண சபையின் ஆளும் கட்சியான பொது மக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர்களிடையே ஏற்பட்டுள்ள பலத்த கருத்து வேறுபாடுகளைத் தொடர்ந்து இரு தென்மாகாண சபை உறுப் பினர்கள் தமது பதவிகளை ஏற்க மறுத்து வருகின்றனர்.

காலி மாவட்டத்திற்கு ஒரு உறுப்பினரை நியமிப்பதுதொடர்பாக ஏற்பட்டதகராறே இவர்கள் பதவி ஏற்க மறுத்து வருவதற்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது.

---

## நீங்காத நினைவுடன் 1-ம் ஆண்டு
## கண்ணீர் அஞ்சலி

தாயின் மடியில்:
21 - 09 - 1976

ஆண்டவன் நிழலில்
20 - 03 - 1993



**வீரவேங்கை தென்னவன்/சேகர்**
**(மகாலிங்கம் சுதர்சன்)**

திதி: 07 - 04 - 1994

ஓராண்டு சென்றாலும் உன் நினைவுகள் மாறவில்லை தன்மான தமிழினத்தின் மானங்காக்கப் புறப்பட்டாய் மகனே!
மின்னாமல் முழங்காமல் திடீரென்று வந்த நெஞ்சு வருத்தம்
காலன் கையில் அகப்பட்டுக் கொண்டாய்
அண்ணா என்று கூப்பிட்டால் காலடியில் நிற்பாயே வருவேன் என்று சொல்லிவிட்டு போய் விட்டாயே...
எங்கள் அன்பு மகனின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

சேணியடி வீதி, மீசாலை மேற்கு, மீசாலை.

அப்பா, அம்மா, தங்கைமார், உறவினர்.

(சி-9021)

---

குமாரசாமி, உபதலைவராக திருமதி ச. வேலாயுதரன், செயலாளராக திரு. ஆ. செல்லத்துரை, உபசெயலாளராக செல்வி சொ. குமாரசாமி, பொருளாளராக திரு. ந. ஜெகநாதன் ஆகியோருடன் ஆறுபேர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

(22)

ஃ ஃ

(தென்மராட்சி)

சாவகச்சேரி மருத்துவ மனையின் நோயாளர் நலன் புரிச்சங்கத்தின் வருடாந்த நிர்வாகசபை தெரிவுக் கூட்டம் கடந்த 3-ம் திகதி மருத்துவ மனையில் இடம் பெற்றது.

இதற்கு புதிய தலைவராக திரு. த. நவரத்தினராசா அவர்களும் செயலாளராக திரு. த.இரத்தினராசா அவர்களும் பொருளாளராக திரு. த. சின்னத்தம்பி அவர்களும் உட்பட 9பேர் நிர்வாகசபை உறுப்பினராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

(86)

ஃ ஃ

சாவகச்சேரி நகராட்சி ஊழியர் நலன் புரிச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த 29-ம் திகதி நகர மண்டபத்தில் இ. நடராசா தலைமையில் இடம் பெற்றது.

இதில் புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவில் தலைவராக திரு. இ. நடராசா, செயலாளர் திரு. சோ. உதயகுமார், பொருளாளராக திரு. பி. சின்னத்துரை கணக்காளர உத்தியோகத்தராக திரு. த. நவரத்தினவேல் ஆகியோருட்பட 13பேர் நிர்வாக உறுப்பினராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

(86)

---

தாங்காது தவிக்கின்றோம்.


தனங்கிளப்பு, சாவகச்சேரி.

- குடும்பத்தினர்.

(7932)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**தம்பையா தம்பிநாதன்**
**(சின்னமணி)**

தோற்றம்: 15-03-1933

மறைவு: 19.03.1993

திதி: 07 04-1994

ஆண்டொன்று சென்றாலும் அன்பு முகம் மறக்க முடியவில்லை அழியா நினைவலைகள் ஆட்டிப் படைக்கிறதே அன்போடு எம்மை அரவணைத்த அப்பா இனிஎன்று உம்முகம் காண்போம்? பார்ப்பதற்கு பலிருக்க பாதியிலே விட்டுவிட்டு நாம் நினையா நாளிலே எமை விட்டேன் மறந்தனையோ? நீங்கள் இம் மண்ணகம் விட்டு விண்ணகம் சென்றாலும் எங்கள் நெஞ்சங்களில் இன்று வரை வாழ்ந்து கொண்டே இருக்கிறீர்கள். பாரதனிலே எம்வாழ்விற்காய் உங்களை உரமாக்கினீர்கள். எம் உயர்வு காணும் முன்னே இறைவன் தாள் சென்றடைந்ததேனோ? அப்பா உங்கள் ஆத்மா சாந்தியடைய நாங்கள் என்றும் பிரார்த்திக்கிறோம்.

9(65) பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்.

(சி-9002)

# சீன போர்க்கப்பல் கொள்வனவு; பின்னணியில் நடந்தது என்ன?

## சண்டே ஐலண்ட் தரும் தகவல்

(கொழும்பு)

சீனாவிடமிருந்து 1. 15 பில்லியன் ரூபாவுக்கு நான்கு போர்க்கப்பல்கள் வாங்குவது தொடர்பாக சீனாவுக்கும் சிறிலங்காவிற்கும் இடையில் ஒப்பந்தம் ஏற்படுவதில் ஆரம்பத்தில் சிக்கல் நிலை ஏற்பட்டது. இது 4 போர்க் கப்பல் கொள்வனவை மட்டுமல்ல ஜனாதிபதியின் உத்தேச சீன விஜயத்தையும் பாதிக்கப் போவதாக கொழும்பு அரசியல் -பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டது.

ஒப்பந்தம் செய்யப்படுவதில் ஆரம்பத்தில் ஏற்பட்ட தேக்கம் சீன - சிறிலங்கா உறவிலும் பாதிப்பு ஏற்படலாம் என அஞ்சப்பட்டது. இந்நிலையில் கடற்படைத்தளபதி நிதி அமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கம் சீனாவிற்கான சிறிலங்கா தூதுவர் ஆகியோர் சரியான நேரத்தில் தலையிட்டதன் பேரில் கடைசி நேர முறுகல் நிலை தவிர்க்கப்பட்டது இவ்வாறு சண்டே ஐலண்ட் பத்திரிகையில் சீனாவிடமிருந்து ஆயுதம் கொள்வனவு செய்வது தொடர்பான சிறிலங்காவின் நடவடிக்கைக்கு பின்னணியில் இருந்த காரணங்களை விளக்கும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிறிலங்கா கடற்படைத்தளபதி சீனா சென்று கொள்வனவு செய்யவுள்ள போர்க்கப்பல்களை பார்வையிட்டு அதில் திருப்தி ஏற்பட்டால் கொள்வனவு குறித்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுமாறு அங்குள்ள சிறிலங்கா தூதுவருக்கு பச்சைக்கொடி காட்டுவதாக இருந்தது. ஏனெனில் இது சீன -சிறிலங்கா அரசுகளிடையிலான ஒப்பந்தமாகும். ஜனாதிபதி சார்பில் சிறிலங்கா தூதுவர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அனுமதியும் வழங்கப்பட்டு விட்டது.

இச்சமயத்தில் நிதி அமைச்சிலிருந்து வந்த ஒரு அறிவிப்பு இந்தப் போர்க்கப்பல் கொள்வனவுக்குத்தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என கடற்படைத்தளபதிக்குக் கிடைத்தது. இதைத் தொடர்ந்து தொலைபேசியில் கொழும்பிற்கும் சீனாவிற்கும் இடையில் அனல் பறக்கும் உரைகள் நடந்தது. கடைசி நேரத்தில் ஏதோ தவறு நடந்துவிட்டது என அறிந்த கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் சமரசேகர என்ன நடந்தது என்பதை தமக்கு கூறுமாறு கோரினார். இதற்கு பதிலளித்த நிதி அமைச்சின் செயலாளர் திறைசேரியிடம் பாதுகாப்பு அமைச்சு தேவையான நிதியை ஒதுக்குமாறு முறைப்படி விண்ணப்பிக்கவில்லை எனக் குறிப்பிட்டார்.

பாதுகாப்பின் அசமந்தப் போக்கினால் தேசிய பாதுகாப்பிற்கு தேவையான தமது முயற்சி கவிழ்ந்து விட்டதை கடற்படை தளபதி உணர்ந்தார். இப்பிரச்சினையை விரைவில் தீர்க்காவிடின் தாம் விரைவில் நாடு திரும்பி பதவியை இராஜினாமா செய்யப்போவதாக தளபதி நிதியமைச்சின் செயலாளருக்கு அறிவித்தார். பாதுகாப்பு அமைச்சே தனது பயணத்தை ஒழுங்கு செய்து அதுவே இப்போது தனது முயற்சியில் தாமதத்தையும் ஏற்படுத்துவது குறித்து கடற்படை தளபதி ஆத்திரத்துடன் காணப்பட்டார்.

இந்த ஆயுதக்கொள்வனவு ஒப்பந்தம் பாதிக்கப்பட்டால் சீன - சிறிலங்கா உறவு மற்றும் ஜனாதிபதி விஜேதுங்காவின் சீன விஜயம் என்பன பாதிப்புறும் என்பதை சிறிலங்காவிற்கான சீனத்தூதுவர் உணர்ந்துகொண்டார். இவ்வேளையில் பாதுகாப்பு அமைச்சின்செயலாளர் ஹமில்டன் வணசிங்க நாட்டில் இல்லாத நிலையில் ஒப்பந்தம் ஏற்படுவதில் ஏற்பட்டுள்ள தேக்க நிலைக்கான காரணத்திற்கு தாமே முழுப்பொறுப்பு ஏற்றுக்கொண்ட நிதி அமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கம் தேவையான நிதியை வழங்குவதற்கான உத்தரவை வழங்க பணித்தார்.

இதைத்தொடர்ந்து எட்டு முதல் 10 வருட காலத்திற்குச் செலுத்தி முடிக்கக்கூடிய வகையிலான 1. 15 பில்லியன் ரூபாவிற்கான 4 போர்க்கப்பல் கொள்வனவு கைச்சாத்தானது.

இதுவரை இந்த ஒப்பந்தம் முன்னதாக கைவிடும் நிலை வரை வந்ததற்கு பாதுகாப்பு அமைச்சில் என்ன நடந்தது என்பது குறித்து தெரியவரவில்லை. பாதுகாப்பு அமைச்சின் சில அதிகாரிகள் சீனாவுடனான ஆயுதக் கொள்வனவில் அரசுகளிடையிலான ஒப்பந்தத்தை எதிர்ப்பதாகவும் ரஷ்யாவிடமிருந்து தனியார் நிறுவனங்கள் மூலம் செய்யும் ஆயுதக் கொள்வனவில் கமிஷன் பெறுவதைப் போன்று இந்த சீன ஒப்பந்தத்தின் மூலம் நடைபெறும் ஆயுதக் கொள்வனவில் கமிஷன் பெறமுடியாது என இவர்கள் நம்புவதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இதேவேளை கடற்படை தளபதி எவ்வாறு இந்த ஆயுதக் கொள்வனவு ஒப்பந்தம் தொடர்பாக ஏனைய படைத்தளபதிகளுடன் கலந்து பேசாமல் செல்ல முடியும் என்றும் பொது மக்கள் பணத்தில் இராணுவ தளபாடம் வாங்கச் சென்ற கடற்படை குழுவில் பாதுகாப்பு மற்றும் நிதி அமைச்சின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை. மக்களின் பணத்தில் எவ்வாறு ஆயுதப்படைகள் தன்னிச்சையாக செயற்பட முடியும் எனவும் சீன - சிறிலங்கா அரசுகளுக்கிடையிலான ஆயுதக் கொள்வனவு ஒப்பந்தமாயின் கடற்படைத் தளபதி ஏன் சீனா சென்றார் எனவும் சில வட்டாரங்கள் கேள்வி எழுப்பியுள்ளன என்று ஐலண்ட் பத்திரிகையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## லக்ஸ்பிறே விநியோகம்

(கோப்பாய்)

மானிப்பாய் வர்த்தக நிலையங்களில் விற்பனை நிலையத்தில் 400 கிராம் எடை கொண்ட "லக்ஸ்பிறே" முழு ஆடை பால்மா பக்கற் ஒன்று 60 ரூபாவாக பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

வேறு பொருட்களை 100 ரூபாவுக்கு வாங்குபவர்களுக்கு இந்த லக்ஸ்பிறே பால்மா விநியோகிக்கப்படுவதுடன்; சவர்க்காரம், மரக்கறி போன்றவைகளும் சகாய விலையில் விற்கப்படுகின்றன. (41)

## கூட்டுறவு அபிவிருத்திக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கூட்டுறவு முகாமை நிறுவனம் திருகோணமலையில் நடாத்திய 'கூட்டுறவு அபிவிருத்திக் கூட்டத்தை' யாழ். மாவட்டத்தில் நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக நிறுவனத்தின் உசாத்துணை ஆலோசகர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இக்கூட்டம் நாளை வெள்ளிக் கிழமை காலை 9 30 மணிக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும் எனவும் பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (22)

### போராட்டத்திற்கு

## திரைப்படத்துறை கலைஞர் வலுச் சேர்க்க வேண்டும்

(பருத்தித்துறை)

"உலகெங்கும் திரைப்படத்துறை வலுமிக்க ஒரு கலைச் சாதனமாக இன்று திகழ்ந்துகொண்டிருக்கின்றது. இதனால் பல புதிய திரைப்படத்துறை சார்ந்த கலைஞர்களும் இரசிகர்களும் தோற்றம்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையிலே தமிழீழத்திலே வாழ்கின்ற திரைப்படத்துறை சார்ந்த கலைஞர்கள் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கவும், போராட்டத்துடன் மக்களை இணைக்கவும், போராட்டத்தின் மெய்யுண்மைகளை வெளி உலகிற்கு தெரியப்படுத்தவும் திரைப்படக் கலைச் சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்".

மேற்கண்டவாறு, விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக திரைப்படப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. பாஸ்கரன் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். வடமராட்சிப் பகுதியில் உள்ள கலைஞர்கள் திரைப்படத்துறை ஆர்வலர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. விபுலன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். தொடர்ந்து உரையாற்றிய திரைப்படப் பிரிவு பொறுப்பாளர் திரு. பாஸ்கரன் இந்திய மக்கள் மொழிபெயர்க்கப்பட்டு செயற்பட வேண்டிய தன் அவசியத்தை எடுத்தியம்பி நின்றது. அதனைத் தொடர்ந்து சேவாசதனம், ஆலயப் பிரவேசம், தியாக பூமி, தேசாபிமானம் பேச்சே போன்ற பல திரைப்படங்கள் வெளிவந்து இந்தியாவின் சீர்திருத்த நடவடிக்கைகளை வெளிக்கொண்டு வந்தன. இன்று இந்தியாவில் தயாரிக்கப்படும் திரைப்படங்கள் பல வியாபார நோக்கம் கொண்டே தயாரிக்கப்படுவதனால் பல குறைபாடுகள் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. தமிழீழத்திலே தயாரிக்கப்படுகின்ற அனைத்து திரைப்படங்களின் பிரதிகளும் திரைப்படப் பிரிவுக்கு அனுப்பப்பட்டு திரைப்படப் பிரிவின் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னரே படத் தயாரிப்பு ஆரம்பிக்க முடியும். ஸ்ரீலங்கா அரசின் இனவாத யுத்த நிலைமைகளைக் கலைஞர்கள் கவனத்திற் கொண்டு மக்களை விழிப்படையச் செய்து புதிய கலை வடிவங்களைக் கலைஞர்கள் தயாரிக்க முன்வரவேண்டும்.

விடுதலைப் புலிகள் கலை,


கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ. சங்கம்

**பதவி வெற்றிடம்**

செயலாளர்: 114. 9

சம்பள அளவுத் திட்டம்:

1205/- - 40 X 5 - 50 X 10 - 1905/-

இவற்றுடன் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்

தகைமைகள்:

(அ) 1. 10 ஆவது சம்பளத் திட்டத்தில் அமைந்த அலுவலக உதவியாளர் பதவி / அங்கத்துவ உறவுப் பயிற்சி உத்தியோகத்தர் பதவி / நிருவாகப் பகுதியின் எழுதுனர் பதவியில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

11. 11-வது சம்பளத்திட்டத்தில் அமைந்த அலுவலக உதவியாளர் பதவி / அங்கத்துவ உறவு பயிற்சி உத்தியோகத்தர் பதவி / நிருவாகப் பகுதியின் எழுதுனர் பதவியில் நான்கு வருடத்திற்குக்குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) செயலாளர் கடமைகளில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவத்துடன் பட்டயச் செயலாளருக்கும் நிருவாகத்தினருக்குமான ஸ்தாபனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தி;

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் (உ/த) / க. பொ. த (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களுடனான சித்தியுடன் செயலாளர் கடமையில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

வயதெல்லை:

20 - 40 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

சங்கப் பணியாளருக்கு வயதெல்லையில் விலக்களிக்கப்படும்

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபால் மூலம் 20 - 04 - 94 ஆம் திகதிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி "தலைவர், கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி."

– தலைவர்

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்,
கரவெட்டி. (சி-9026)



**O/L DAY CLASS**

பகல் நேர வகுப்பு

ஏப்ரல் 5-ல் ஆரம்பம்

O/L வகுப்புகளுக்கு தனித்துவம் பெற்ற நிறுவனமாக 21 ஆண்டுகளுக்கு மேல் சிறந்து விளங்கும்

இணையற்ற நிறுவனம்

ESTD:-1973 REGD:- № J/7993

The Express Institute

IRUPALAI - KOPAY



உ

**திருமண விருந்துபசாரமும் பிறந்தநாள் வைபவமும்**

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுகவருடம் தைத்திங்கள் 24ஆம் நாள் (6 - 2 - 94) ஞாயிற்றுக் கிழமை அன்று ஜேர்மனியில்

## பிறந்தநாள் வைபவமும்

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுகவருடம் தைத்திங்கள் 24ஆம் நாள் (6-2-94) ஞாயிற்றுக் கிழமை அன்று ஜேர்மனியில்

எனது மகன் **ஸ்ரீகுமாரகுரு** அவர்கட்கும்

நயினை நாகலிங்கம் தம்பதிகள் மகள் **நாகேஸ்வரி (ஈசா)** அவர்கட்கும்

நடைபெற்ற திருமண வைபவத்தை முன்னிட்டும்



எனது பேரன்

அழகராசா அருந்ததி

தம்பதிகளின்

அருமைப் புதல்வன்

**தர்சன்**

அவர்களின்

முதலாவது பிறந்த நாளை முன்னிட்டும் எனது இல்லத்தில் 08-04-94 வெள்ளிக் கிழமை பி. ப. 4.00 க்கு விருந்துபசாரம் செய்யத் தீர்மானித்துள்ளதால் உறவினர் அயலவர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அழகராசா அருந்ததி தம்பதிகளின் அருமைப் புதல்வன் தர்சன் தனது முதலாவது பிறந்தநாளை கொண்டாடுகின்றார் அவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், குமார் சித்தப்பா (சுவிஸ்), மாமாமார், மாமிமார், மச்சாள்மார், குருமாமா ஈசாமாமி, குச்சன் மாமா (ஜேர்மனி), ஸ்ரீமாமா, மதிச் சித்தா இருபா சித்தப்பா (கனடா), ஜெயந்திச்சித்தா, சோதிசித்தப்பா, உதயன்மாமா (மட்டுவில்), மற்றும் மாமிமார், ஊமாமார் உற்றார், அயலவர் அவரை வாழ்த்துகின்றனர்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

**திருமதி கு. மகாதேவன் ஜெயலட்சுமி குடும்பத்தினர்**

முத்துமாரி அம்மன்வீதி,
மட்டுவில் வடக்கு,

(5094)

கழக வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. விபுலன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். தொடர்ந்து உரையாற்றிய திரைப்படப் பிரிவு பொறுப்பாளர் திரு. பாஸ்கரன் குறிப்பிட்டதாவது:

இன்று அளப்பெரும் தியாகத்தின் நிமித்தம் எங்கள் புனிதப்போர் கடரிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. இவ் உன்னத நிலை கண்டு உலக அரங்குகள் பலவும் வியப்போடு எம்மண்ணை உற்றுநோக்கிக் கொண்டிருக்கின்றன. தாய்மையான எமது போராட்டத்தின் அறுவடையான தமிழீழத்தை நாம் பெற்றுக் கொள்கின்றபோது தமிழீழம் ஆரோக்கியமான உன்னத சமுதாயத்தைக் கொண்டதாக அமைய வேண்டும். இவ்விடயத்திலே இம் மண்ணில் வாழும் அனைத்து மக்களும் அதிக அக்கறை எடுக்க வேண்டும்.

இந்தியாவிலிருந்து இறக்குமதியாக்கப்படுகின்ற பல தமிழ் மசாலாப் படங்கள், பாலியல் வக்கிரத்தைத் தூண்டும் வகையிலும், சமுதாயச் சீரழிவுகளுக்குத் தூபமிடுவனவாகவும் காணப்படுகின்றன. இதுபோன்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காகவே தற்போது திரைப்படத் தணிக்கைச்சபை செயலாற்றுகின்றது. அதே வேளை இம்மண்ணின் போராட்ட நிகழ்வுகளை ஆவணப் படுத்தவும், போராட்டத்தோடு மக்களை இணைத்துக் கொள்ளவும், போராட்டத்தின் அதியுயர் உன்னத தன்மையை உலக அரங்கிற்குத் தெரியப்படுத்தவும் புதிய தமிழ் திரைப்படங்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1931-ம் ஆண்டு காளிதாஸ் என்ற பெயரில் தமிழின் முதன்முதல் பேசும் படம் உதயமானது. இப் பேசும் படம் முதல் படமாக இருந்தபோதும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெற

செய்து புதிய கலை வடிவங்களைக் கலைஞர்கள் தயாரிக்க முன்வரவேண்டும்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக யாழ். மாவட்ட பொறுப்பாளர் திரு அன்பரசனும் உரையாற்றினார்.

(25)

ESTD:-1973 REGD:- № J/7993

**The Express Institute**

IRUPALAI - KOPAY

பெயர்களை உடன் பதிந்து
இடத்தினை உறுதி செய்யுங்கள்

(சி-9023)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## 96 A/L கலை வர்த்தகம்

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல்<br>திரு. க. கலாகரன் | வர்த்தகம்<br>திரு. தேவா | கணக்கியல்<br>திரு. S.K. பிரபாகரன் |
| அளவையியல்<br>திரு. விக்கி | தமிழ்<br>திரு. குழந்தை | இந்துநாகரிகம், இந்துசமயம்<br>திரு. காரை. சுந்தரம்பிள்ளை |
| புவியியல்<br>திரு. குணராசா | அரசியல்<br>திரு. சீலன் | வரலாறு<br>திரு. சிறீதரன் |

சனி, ஞாயிறு வகுப்புகள்
(வார இறுதி)
ஆரம்பம்: 09-04-1994
காலை 8 மணி

மாலை நேர வகுப்புகள்
(கிழமை நாட்களில்)
ஆரம்பம்: 11-04-1994
மாலை 4 மணி

O அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(சி-9024)

### சிந்தனைக்கு

வெறுமையிலிருந்து உதிக்கும் கனவுகள் இலேசானவை; அவை பொருளல்ல.

- ஜோன் கீட்ஸ்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 07-04-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2021

தபால் பெட்டி எண் 05


## கிழநரியின் கனவுகள் கலைகின்றன

ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்ச்சியில் இருந்து காப்பாற்றும் முயற்சியில் கிழநரியான ஜே ஆர். ஜெயவர்த்தனா மீண்டும் இறங்கியுள்ளார். ஐ. தே. கட்சியின் கடந்த கால அரசியல் வரலாற்றிலும் இவ்வாறு இக்கிழநரி ஐ. தே. கவை வீழ்ச்சியில் இருந்து காப்பாற்ற பலதடவை முற்பட்டுள்ளது. அதில் வெற்றியும் கண்டுள்ளது என்றே கூறலாம்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் கற்பனை பெரியது, 1977ஆம் ஆண்டு அவர் பதவி ஏற்ற பின்னர், தான் இருக்கும் வரையும் சிறிலங்காவின் தனிப்பெரும் தலைவனாக தானே இருக்க வேண்டும் என்பதில் அவர் குறியாகவே இருந்தார். அத்தோடு, தனது காலத்தில் மட்டுமல்ல, தனக்குப் பின்னரும் கூட ஐ தே. கட்சியே ஆட்சியில் இருக்க வேண்டும் என்பதில் அவரது அக்கறை இருந்தது.

இதற்கென அவர் தனது ஜனாதிபதிக்கான அதிகாரத்தைப் பயன்படுத்தவோ, ஜனநாயக விரோதச் செயல்களில் ஈடுபடவோ தயங்கவில்லை. இதன் ஒரு கட்டமாக எதிர்த்தரப்பு அரசியற் கட்சிகளை எல்லாம் சிதைத்தார். அரசியல் அமைப்புச் சட்டத்தையும் மாற்றி ஐ தே. கவிற்கு வசதி அளிக்கக் கூடியதான சட்டத்தை உருவாக்கினார்

ஆனால், இனப்பிரச்சினையில் அவர் எடுத்த அரசியல் நிலைப்பாடு காரணமாகத் தென்னிலங்கையில் ஏற்பட்ட கொந்தளிப்பு - ஜே. வி. பி யின் கிளர்ச்சி - அவரின் 'ஆயுள் காலத் தலைவன்' என்ற ஆசையில் மண்ணைப் போட்டது. ஜனாதிபதி பதவி தேவையில்லை. யாராவது பிடித்துக் கொண்டால் போதும் என்றநிலையில் அரசியலில் இருந்து ஒதுங்கப் போவதாக அறிவித்து விட்டு பதவியையும் துறந்தார்,

இருப்பினும், ஐ. தே. க. ஆட்சியாவது தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்பதில் குறியாகவே இருந்தார் இருப்பினும், ஜனாதிபதி பிரேமதாசாவின் அரசியலை அவரால் வழிநடத்த முடியவில்லை. ஆனால், பிரேமதாசாவின் மரணத்தின் பின்னர் மீண்டும் அரசியலில் கிழநரியின் கை வேலை செய்யத் தொடங்கியது. அரசியல் குறித்துப் பேசவும் ஆரம்பித்தது.

தற்பொழுது, தென்மாகாண சபைத் தோல்வியைத் தொடர்ந்து தனது மற்றைய கனவுகளும் கலையத்

# பல் சம்பந்தமான நோய்களுக்கு காரணம் வாய்ச் சுகாதாரம் பேணாமையே ஆகும்

இன்று உலக சுகாதார தினமாகும். இத்தினத்தின் தொனிப்பொருளாக ''வாய்ச் சுகாதாரம்'' பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது. மனிதனின் நலவாழ்விற்கு வாய்ச் சுகாதாரம் வகிக்கும் முக்கியத்துவத்தை இவை உணர்த்துகிறது.

உயிர்வாழ்விற்கு அவசியமான உணவை உட்கொள்ளுவதற்கு வாய் அவசியம். ''பல்லுப் போனால் சொல்லுப் போய்விடும்'' என்றமுதுமொழிக்கேற்ப மனிதனின் முக்கிய தொடர்புசாதனமாகவும், தோற்றப் பொலிவும், தன்னம்பிக்கையும் மேம்படுத்தும் அங்கமாகவும் பற்களும் வாயும் அமைகிறது, எனவே வாய் நலம் பேணுதல் 'சுக வாழ்வு' என்ற நிலைக்கு அவசியமாகிறது.

எமது பிராந்தியத்தில் வைத்தியசாலைகளிலுள்ள பற்சிகிச்சை நிலையங்களில் பரிகாரம் செய்ய வருபவர்களில் 70 /. பேர் பற்களை இழக்கும் நிலையிலேயே வருகிறார்கள் இந்நிலையில் தாங்களும் நோயின் வலியால் வருந்துவதோடு இதைப் பார்ப்பவர்களுக்கும் துன்ப உணர்வையே கொடுக்கிறார்கள். இவர்கள் தங்களது பொன்னான நேரத்தை சிகிச்சை நிலையங்களில் அசௌகரியமாகக் காத்துக் கிடப்பதில் விரயம் செய்கிறார்கள்.

சிகிச்சை நிலையங்களில் பற்களை இழக்காமல் பாதுகாக்கக் கூடிய நிலையில் வருவோருக்கும் ஏற்ற சிகிச்சைகளைப் பூரணமாகச் செய்ய ஆளணி பற்றாக்குறை, சாதனங்கள், மருந்துவகைகளில் விநியோகத்திற்கான பொருளாதாரப் பிரச்சினை என்பன முழு இலங்கையிலுமே இருக்கும் போது பொருளாதாரத் தடை மற்றும் யுத்தத்தில் சிக்கியிருக்கும் எமது பிராந்தியத்தில் சிகிச்சை வசதிகளின் நிலைப்பாட்டுடன் இதனால் வைத்தியர்களின் மனச்சோர்வும் எம்மால் விளங்கிக்கொள்ளக் கூடிய விடயமாகும்,

இந் நிலையை நிவர்த்தி செய்ய நாம் மாற்றுவழியை நாடவேண்டியுள்ளது. இந்த நோக்கில், வாயில் ஏற்படும் நோய்களை ஆராயும்போது அதிர்ஷ்டவசமாக பெரும்பாலான நோய்களை மிகஎளிமையாக ஒவ்வொருவரும் தானே தனக்கு மேற்கொள்ளக்கூடிய பொருளாதார நன்மையுடையதுமான செயல்கள்

> இன்று உலக சுகாதார தினத்தையொட்டி 'வாய்ச்சுகாதாரம்' தொனிப் பொருளாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. மக்களிடையே பல், முரசு வியாதிகள் ஒரு சமூகப் பிரச்சினையாகும். இதனையிட்டுபொதுமக்கள் விழிப்படையச் செய்யும் நோக்கில் இக்கட்டுரை பிரசுரமாகிறது.

மூலம் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கிறது. வாய் நோய் சம்பந்தமான உலகளாவிய புள்ளிவிபரத்தை நோக்கும் போது 90·/. மக்கள் பற்சிதைவு, முரசு கரைதல் ஆகிய இரு பல் வியாதியினாலும் பீடிக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறது மற்றும் ஒழுங்கற்ற பல்வரிசையும், வாய்ப்புற்று நோயும் ஒப்பீட்டளவில் எமது பிராந்தியத்தில் அதிகமாக நிகழ்கின்றது இலங்கையின் மற்றைய பகுதிகளில் மட்டுமல்ல நல்ல வளமுள்ள அபிவிருத்தியடைந்த சில நாடுகளிலும் இம்முறை கைக்கொள்ளப்பட்டு வாயில் வரும் முக்கிய நோய்களை பெருமளவில் கட்டுப்படுத்துவதில் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள்; எனவே பொருளாதார, வைத்திய வசதிகளில் பின்தள்ளப்பட்டுள்ள எமது பிரதேசத்தில் ஒவ்வொருவரும் தாமே இதை உணர்ந்து நடந்து கொள்ளாமல் அசிரத்தையாக இருந்தால் நமது சமுதாயத்திற்கு இழுக்கு ஏற்படும்

எமதுபிராந்தியத்தில் 75 /. பல் இழப்பிற்கு பற்சொத்தை வியாதியே காரணமாக இருக்கிறது. சாதாரணமாக எமது வாயில் பெருகிவரும் பற்றீரியாத் தாக்கத்தினால் அமிலத் தன்மையை ஏற்படுத்திச்சிதையக்கூடிய இனிப்புப் பதார்த்தங்கள் வாயில் அதிக அளவில் அதிக நேரத்திற்குத் தேங்கியிருக்கும்போது, பற்களின் மேற்பரப்புகளில் கண்ணிற்குப் புலப்படாமல் நாளாந்தம் தேங்கும் பற்றீரியாப் படலமானது Plaque) பற்களின் அந்தப்பகுதி மேற்பரப்புகளின் வன்மைத்தன்மையைத் தாக்கிக் குறைத்து துவாரங்களை ஏற்படுத்தி பற்றீரியாக் கிருமிகள் பல்லின் உட்பகுதிகளுக்கு சென்று பற்சிதைவை ஏற்படுத்துகிறது இப்படியான தாக்கத்திற்கு வாய்ப்பான பற்களின் மேற்பரப்பில் 'புளோறைட்டு' என்னும் பதார்த்தம் படிவது நடைபெறச் செய்தால் அந்த மேற்பரப்பில் அமில அரிப்பை எதிர்க்கக் கூடிய நிலை ஏற்படுகிறது. எனவே அமிலத்தன்மையை உண்டாக்கும் இனிப்புப் பதார்த்தமான சுத்திகரிக்கப்பட்ட சீனி, சர்க்கரை, கற்கண்டு, பனங்கட்டி, தேன் முதலிய பதார்த்தங்கள் சேர்ந்த உணவை சாப்பிடுவதை கட்டுப்படுத்துவதாலும் பற்களில் முக்கியமாக பற்றீரியாப்படலம் தேக்கமடையக்கூடிய இடங்களைக் கவனித்து நாளாந்தம் தூரிகை மூலம் பயனுள்ள முறையில் நீக்குவதாலும், பற்களின் மேற்பரப்பில் தகுந்த அளவில் புளோறைட்டுப் பிரயோகத்தைச் செய்வதாலும் பற்சொத்தை நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

இதற்கு அடுத்த பெருமளவில் முரசுகரையும் நோயினால் எமது பிராந்தியத்தில் பல் இழப்பு ஏற்படுகிறது இந்நோய் எலும்பின் குழிக்குள் பற்களைத் தாங்கிநிற்கும் மெல் இழையத்தைப் பாதிக்கும் நோய் ஆகும். பற்களின் மேற்பரப்பு முரசுடன் தொடர்புறும் இடத்தில் ஒதுங்கும் பற்றீரியாப்படலத்தில் நாளாந்தம் ஒதுங்கும் நச்சுக் கழிவினால் நோயின் ஆரம்பத்தில் முரசில் ஏற்படும் ஒவ்வாத் தன்மைக்குரிய அளர்ச்சியே பொதுவாக மறைமுகமாக பல் தாங்கும் நார் இழையத்தினுள் பரவி அவ்விழையத்தைச் சிதைத்துப் பல்தாங்கும் எலும்பிலும் இழப்பை ஏற்படச்செய்து பல்லின் உறுதியைக் குலைக்கின்றது. பற்களோடு முரசுகள் தொடர்புறும் இடங்களில் ஒதுங்கும் பதார்த்தங்களையும் நாளாந்தம் படியும் பற்றீரியாப் படலத்தையும் நாம் நாளாந்தம் சரியாக தூரிகை பிரயோகித்து அகற்றும் பழக்கத்தின் மூலம் இந்நோயைக் கட்டுப் படுத்தலாம்.

பல்வரிசை ஒழுங்கு தவறி இருக்கும் குறைபாடு சிறுவயதில் அவதானிக்கப்பட்டால் திருத்துவதற்கு வாய்ப்புக்கள் அதிகம். வெளித்தள்ளிக் கொண்டு முன்னிற்கும் பற்கள் விபத்தின்போது முறிவடைவதற்கான சாத்தியம் அதிகம்.

### டாக்டர் (செல்வி.) உ. சிவபாதசுந்தரம்

### (யாழ் பிராந்திய பல்வைத்திய அதிகாரி)

எமது பிரதேசத்தில் வாய்ப்புற்றுநோய் சம்பவிப்பதற்கு புகையிலைசேர்த்துவெற்றிலை பாக்கு, சுண்ணாம்பு உண்ணும் பழக்கமும் அவற்றை வாய்க்குள் அதிக நேரத்திற்கு வைத்திருப்பதுமே பிரதான காரணமாக அறியப்பட்டிருக்கிறது. அத்துடன் வாய்ச் சுகாதாரம் பேணாமை. போஷாக்குக் குறைபாடு என்பன இந்த வியாதியை ஏற்படுத்துவதற்கு சந்தர்ப்பத்தை அதிகரிக்கின்றது

தொகுப்பு

ஒவ்வொருவரும் பின்வரும் எளிய பழக்கவழக்கங்களைக் கைக்கொண்டும், வருங்கால சமுதாயத்தினரிடையே இதை ஊக்குவிப்பதன் மூலம் தன் முயற்சியில் நலமாக வாழ்வதோடு சமுதாய மட்டத்தின் இந்நோயின் தாக்கத்தில் உக்கிரத்தை வெகுவாகக் குறைக்கலாம். அத்துடன் வைத்தியசாலைக்குச் சென்று வருந்திச் சிகிச்சைபெறும் நிலையையும் தவிர்க்கலாம்.

- இனிப்புப் பண்டங்களை உண்பதை மட்டுப்படுத்துதல். முக்கியமாகச் சாப்பாடுநேரம்தவிர்ந்த இடைநேரங்களில் இவற்றை உண்ணுவதைத் தவிர்த்தல்.
- உரியமுறையில் பற்களையும் முரசுகளையும்புளோறைட்டு சேர்ந்த பற்பசையை உபயோகித்து நாளாந்தம் சுத்தம் செய்தல்,
- வெற்றிலை, பாக்கு. சுண்ணாம்புடன் புகையிலையையும் சேர்த்துஉண்ணும், வாய்க்குள் வைத்திருக்கும் பழக்கத்தைக் கைக்கொள்ளாமல்இருத்தல். இப்பழக்கத்தை முற்றாக நிறுத்திக் கொள்ளமுடியாவிடில் அவற்றைக் குறைத்துக் கொள்ளுதலும், உண்டபின் வாயை நன்றாகக் கழுவிக் கொள்ளுதலும்.
- வருடத்திற்கு ஒருமுறை வாய்ப் பரிசோதனைக்கு உட்பட்டு நோயின் அறிகுறி தென்பட்டால் உரிய ஆரம்ப சிகிச்சையைச் செய்து கொள்ளல்

இவை எல்லாம் முடியாத காரியமா? யாராவது தடை செய்கிறார்களா?

இனிப்பு உணவிற்கும், அதனால் வரும் தாக்கமான பற்சிகிச்சைக்கும் ஏற்படும் கூடிய செலவினங்களைத் தவிர்க்க நல்ல தூரிகை' புளோறைட்டுப் பற்பசை ஆகியவற்றிற்குச் செலவிட்டால் நலவாழ்வு என்ற முதலுக்குச் சேதமில்லாமல் போகலாம் என்று பொருளாதாரரீதியில் சிந்திக்கலாம்-

இலங்கையரை மோசமாக தாக்கிய

## கனேடிய இளைஞருக்கு

### ஒத்துழைப்பு

மன்ற அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

### புலிகளின் குரல்

### வானொலி

...பேசவும் ஆரம்பித்தது.

தற்பொழுது, தென்மாகாண சபைத் தோல்வியைத் தொடர்ந்து தனது மற்றைய கனவுகளும் கலையத் தொடங்கி விட்டதை ஜே ஆர். ஜெயவர்த்தனா புரிந்து கொண்டு விட்டார். இதன் காரணமாகவே மீண்டும் அரசியல் சதுரங்கத்தில் நேரடியாக இறங்குவதற்கு அவர் தயாராகியுள்ளது போல் தெரிகின்றது.

இதன் ஒரு கட்டமாகவே ஜே. ஆர் ஜெயவர்த்தனா இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான தொண்டமானுடன் அவர் நடத்தியுள்ள பேச்சுவார்த்தையும், ஐ தே. கவுடனான கூட்டை தொண்டமான் உடைத்துக் கொள்ளக் கூடாது என்ற கோரிக்கையும் ஆகும், அதாவது, டி பி விஜேதுங்கா கடைப்பிடிக்கும் கொள்கையானது ஐ தே கவிற்கு ஆபத்தை விளைவிக்கும் என ஜே. ஆர். ஜெயவர்த்தனா உணர்ந்து கொண்டது போல் உள்ளது.

ஜே. ஆரின் இம் முயற்சிக்குக் காரணம் தனியாக ஐ. தே. க. பதவியில் இருந்து இறங்க வேண்டி வரும் என்பதனால் மட்டுமல்ல, சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் ஒருதடவை ஆட்சிக்கு வருமானால், தான் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்படலாம் என்ற அச்சமும் பிரதான காரணமாகும் ஏனென்றால், எதிர்க்கட்சியின் மீது ஜே. ஆர். ஜெயவர்த்தனா மேற்கொண்ட அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளை அவர்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள்; அவை மறக்கக் கூடியதும் அல்ல

இதேவேளை, இன்று ஐ. தே. கட்சிக்கும் அதன் அரசாங்கத்திற்கும் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள், பிரச்சினைகள் என்பனவற்றில் பெரும்பான்மையானது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவினாலோ அன்றி அவரது அரசாங்கத்தினாலோ ஏற்பட்டதல்ல; இவற்றில் அனேகமானவற்றிற்கு காரணம் 1977இல் போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம் என்று வெறும் கையுடன் கைகட்டி நின்ற தமிழரைப் பார்த்து ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறியதே ஆகும்; டி. பி. விஜேதுங்கா வெளிப்படையாக இனவாதம் பேசலாம் ஆனால், திட்டமிட்டு தமிழரை அழிப்பதற்கு ஜே. ஆர். ஜெயவர்த்தனா மேற்கொண்ட நடவடிக்கைகள் குறைவானவையல்ல, டி. பி யை விட சற்று அதிகம் என்றே கூறலாம்.

ஆனால், ஜே. ஆர். விரும்பி என்ன விரும்பாவிட்டால் என்ன ஐ. தே. கவின் வீழ்ச்சி தவிர்க்க முடியாததென்றாகவே மாறிவருகின்றது அந்தளவிற்கு அதன் உட்கட்சிப் பூசலும், மக்களின் வெறுப்பும் வளர்ந்துள்ளது. இந்நிலையில், ஜே. ஆரின் இரண்டாவது கனவும் அவர் இறப்பின் முன்னே கலையப் போவது தவிர்க்க முடியாத சூழ்நிலை ஒன்றே உருவாகி வருகின்றது.

# கனேடிய இளைஞருக்கு 4 வருட சிறைத்தண்டனை

## நீதிமன்றத்தில் மன்னிப்புக் கோரினார்

(ரொரன்ரோ)

இலங்கைத் தமிழர் ஒருவரை கொடூரமாக தாக்கிய கனேடிய இளைஞர் ஒருவருக்கு ரொரன்ரோ நீதிபதி நான்கு வருட கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

இத் தீர்ப்பு நீதிமன்றத்தில் அளிக்கப்படும் முன்பு குற்றவாளியாக காணப்பட்ட ஜேசன் ஹாலன்ஸ் என்ற அந்த கனேடிய இளைஞர் அழுத கண்களோடு தமக்கு இரக்கம் காட்டுமாறு நீதிபதியை வேண்டினார். ஆனால் நீதிபதி இதை ஏற்க மறுத்ததுடன் இத்தகைய கொடூரங்களைப் புரியும் வீதியில் அலையும் குண்டர்களுக்கு மன்னிப்பு அளிக்க முடியாது என்றார்.

இதேவேளை இக் கனேடிய இளைஞரால் தாக்குதலுக்குள்ளான இலங்கைத் தமிழரான சிவராஜா வினாசித்தம்பி(45) மூளையில் ஏற்பட்ட பாதிப்பினால் இடது கையும், இடதுபுற முகமும் இயங்க முடியாத நிலையில் ஆஸ்பத்திரியில் நரம்பியல் பிரிவில் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகிறார்

1991இல் குடும்பத்தினருடன் கனடா வந்த வினாசித்தம்பி இங்குள்ள உணவு விடுதி ஒன்றில் சுத்திகரிப்பாளராக பணியாற்றிவந்தார். பணிமுடித்து ஒரு சமயம் வெளியேறிக் கொண்டிருந்த போது இவரை மேற்படி கனேடிய இளைஞர் விடுதியின் பின்னால் வைத்து கடுமையாக தாக்கினார். குடிபோதையிலிருந்த இக் கனேடியரால் மாறிமாறி வினாசித்தம்பி உதைக்கப்பட்டார்.

வழக்கு விசாரணையின் போது ஒரு கட்டத்தில் இக் கனேடிய இளைஞர் நீதிபதியிடமும் வினாசித்தம்பியின் குடும்பத்தினரிடமும் தன்னை மன்னிக்குமாறு கோரினார் தமக்கு இன்னொரு சந்தர்ப்பம் வழங்குமாறும் தாம் இனவாதத்திற்கு எதிராக சமூக சேவை புரிய இடமளிக்குமாறும் அவர் கோரினார்.

இதற்கு பதிலளித்த நீதிபதி இவ்வளவு குறுகிய காலத்தில் குற்றவாளி திருந்துவார் எனத் தாம் நம்பவில்லை என்றார்.

# பாதுகாப்பு செலவைக் குறைக்க அமெ. படை பலத்தில் குறைப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்கப்படைப் பலத்தை 1.4 மில்லியனான குறைக்கும் திட்டத்தின் கீழ் அமெரிக்கப்படைகளின் பலம் தற்போது 1.7 மில்லியனாக ஆக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பெப்ரவரி 28 ஆம் திகதிய கணிப்பின்படி இராணுவத்தில் 566,318 பேரும் கடற்படையில் 491,092 பேரும், விமானப்படையில் 435,681 பேரும், இராணுவக்கடற்படையில் 175,838 பேரும் உள்ளனர்.

வல்லரசுகளிடையிலான பனிப்போர் காலகட்டத்தில் அமெரிக்கப்படைகளின் தொகை 2,1 மில்லியனாக உயர்ந்தது எனினும் பாதுகாப்பு செலவினத்தில் பெரும்குறைப்பை செய்யும் முகமாக ஜனாதிபதி கிளிண்டன் அமெரிக்கப் படைபலத்தை 1.4 மில்லியனாக குறைக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

# இந்திய இராணுவத்திற்கு உள்ளூர் துப்பாக்கிகள்

உள்நாட்டுத் தொழில் நுட்பம் மூலம் புதிதாக வடிவமைக்கப்பட்ட 5.56 எம். எம். ரக துப்பாக்கிகளை இப்போது இந்திய இராணுவத்தினர் பயன்படுத்த தொடங்கியுள்ளனர்.

இவ்வாறு கல்கத்தா மாநிலத்தில் இத் துப்பாக்கித் தொழிற்சாலையில் நாலாயிரம் இதே ரகத் துப்பாக்கிகளை இந்திய இராணுவத்துக்கு வழங்கும் வைபவத்தில் பேசிய லெப். ஜெனரல் ஆர். எல். கலோன் தெரிவித்தார்

அங்கு அவர் மேலும் கூறுகையில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் தற்போதைய நிலைமை காரணமாக இந்திய இராணுவத்திற்கு இந்த ரகத் துப்பாக்கிகள் தேவைப்படுவதாகவும், கூறினார்.

...மன்ற அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

தம்மை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கினால் தாம் மலையக மக்கள் முன்னணியுடன் சேர்ந்து போராட்டத்தில் ஈடுபடப்போவதாக இவர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஐ தே க

பிரேமதாசாவின் வழிமுறைகள் பின்பற்றப்படாமையும் அவரின் செல்வாக்கை கண்டு கொள்ளாமையும் தேர்தல் தோல்விக்கு பிரதான காரணம் எனக் கூறப்பட்டது

## பிரேமதாசா

பிரேமதாசாவின் மறைவுக்கு பின்னர் அவரது கொள்கைகள் கைவிடப்பட்டு வந்தமை குறித்து ஐ தே. கவின் உயர் தலைவர்களும் மூத்த அமைச்சர்களும் கவலை கொண்டுள்ளனர். இதனையடுத்து பிரேமதாசா காலக் கொள்கைகள் மீண்டும் அமுல்படுத்தப்படும் என்பதைக் கோடிகாட்ட மே தினத்தை பயன்படுத்த விழைகின்றனர்.

வழமையாக மே தினத்தன்று நடத்தப்படும் பேரணிக்கு பதிலாக நாடெங்கும் மத வைபவங்களை நிகழ்த்தி பிரேமதாசாவை நினைவு கூர அவர்கள் முற்பட்டுள்ளனர். எனினும் இவ் வைபவங்களில் பிரேமதாசாவின் குடும்பத்தவர்கள் கலந்து கொள்வார்களா என்பது குறித்து தெளிவாக தெரியவரவில்லை.

## வீரச்சாவு

இவரது வித்துடல் இன்று பி. ப 3.00 பணிக்கு வண்ணார்பண்ணை வள்ளுவன் சன சமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அஞ்சலி நிறைவுற அணிவகுப்பு மரியாதையுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு இறுதி இராணுவ மரியாதையுடன் புனித விதை குழியில் விதைக்கப்படும்.

## வானொலி நிகழ்ச்சி நிரல்

1994-4-7 வியாழன் இரவு

8.01ற்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''உயிர் கொடுத்த உத்தமி'

8.10ற்கு - உரை ''நில நடுக்கம் ஏன் எவ்வாறு உண்டாகிறது''

8.20ற்கு - உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் 'கோழிக்கும் ஊசியா'' குறுநாடகம்

8.30ற்கு - செய்திகள்

8.40ற்கு - உலக சுகாதார தின நினைவாக சிறப்பு நிகழ்ச்சி

8.50ற்கு - மலரும்மொட்டுக்கள்

1994-4-8 வெள்ளி காலை

7.02ற்கு - மாவீர வணக்கம்

7.15ற்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்புநிகழ்ச்சி ''அணையாத தீபம் அன்னை பூபதி''

7.25ற்கு - விடுதலை கானங்கள்

7.45ற்கு - செய்திகள்

7.50ற்கு - பத்திரிகைச் செய்திகள்

7.55ற்கு - தாயகப் பாடல் என்பன இடம் பெறும்

அரசு தரப்பில் கருதப்படுகின்றது. இதற்கென விமானப் படை அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். ஏயார் மார்ஷல் என் சலின் பீரிஸ் என்பவரே விமானப்படையின் சிரேஷ்ட அதிகாரிகளின் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
... கிளை நூலகம்.

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்
(வரையறுக்கப்பட்டது) சுன்னாகம்

## பதவி வெற்றிடம்

### விற்பனையாளர் குறி. இலக்கம் 308.15

மேற்படி பதவிக்கு யாழ் மாவட்டத்தில் வசிக்கும் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளத்திட்டம் - ரூபா = $\frac{685 - 860}{10 \times 10 - 15 \times 5}$

இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் சகல அலவன்சுகளும் வழங்கப்படும்.

தகைமை - அ) கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தராதரப் பத்திரம் அல்லது
ஆ) எட்டாம் வகுப்பிலான சித்தியும் விற்பனைத் தொழிலில் மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவமும்
வயது - விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்

விண்ணப்ப முடிவு திகதி- 25 - 04 - 94

விண்ணப்பப் படிவத்தையும் ஏனைய மேலதிக விபரங்களையும் ரூபா 10/- செலுத்தி சங்க வேலை நாட்களில் தலைமைக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்,

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்
சுன்னாகம்.
04 04 . 94

பொதுமுகாமையாளர்
(சி/9039)

யாழ்ப்பாணம்
மாவட்டக் கூட்டுறவுச் சபை வ. து.
இல. 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

## பதவி வெற்றிடம்

### அச்சக முகாமையாளர்:
(தற்காலிகமானது)

சம்பளத்திட்டம்: இல. 165/8 = $\frac{1805 - 2005}{40 \times 5 - 50 \times 10}$

இத்துடன் கூட்டுறவு வேலையாளர்களுக்கான கூ. வே. ஆ. குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சகல படிகளும் வழங்கப்படும்.

வயதெல்லை :- 25 - 40

கூட்டுறவுச் சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் சங்கத்தினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

தகைமைகள்

(அ) கூட்டுறவுப் பணியாளர்களின் 9ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் 3வருடத்துக்கு குறையாத அச்சக தொழில் துறையிலான அனுபவமும் அல்லது 10ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் 6 வருடங்களுக்கு குறையாத இதே சம்பந்தப்பட்ட துறையிலான அனுபவமும்.

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர உயர்தர பயிற்சி நெறியில் அல்லது முகாமைத்துவம் தொடர்பான உயர்தர தேசிய சான்றிதழ் பாடநெறிப் பயிற்சியில் சித்தியுடன் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் நான்கு வருடங்களுக்கு குறையாத அச்சக முகாமையாளராக கடமையாற்றிய அனுபவம்.

விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தினால் நிரப்பப்பட வேண்டும்.

# க. பொ. த. சா. பரீட்சை மேலும் பல முடிவுகள்

| பாடசாலை | பெறுபேறு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் |
|---|---|---|---|
| சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி | 6டி 1சி 1எஸ்<br>5டி 2சி<br>2டி 5சி - 2<br>2டி 4சி 2எஸ் | 191 | 74 |
| சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் | 1டி 3சி 2எஸ்<br>6சி 1எஸ் | 28 | 06 |
| பன்னாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் | 3டி 5சி<br>1டி 4சி 1எஸ் | 59 | 19 |
| பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி | 2டி 3சி 2எஸ்<br>1டி 5சி 1எஸ்<br>1டி 3சி 2எஸ் | 54 | 03 |
| பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி | 3டி 4சி - 2<br>3டி 3சி<br>2டி 6சி<br>2டி 5சி | 94 | 46 |
| சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் | 4டி 2சி<br>3டி 4சி<br>3டி 3சி 1எஸ்<br>3டி 2சி 2எஸ் | 96 | 25 |
| வட்டு இந்துக்கல்லூரி | 6டி 2சி<br>5டி 1சி 1எஸ்<br>3டி 4சி - 2 | 87 | 57 |
| காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி | 5டி 2சி 1எஸ்<br>4டி 2சி 1எஸ்<br>3டி 3சி 1எஸ்<br>2டி 5சி | 88 | 32 |
| வட்டு: திருஞானசம்பந்த வித்தியாசாலை | 2டி 3சி 3எஸ்<br>2டி 3சி 2எஸ்<br>1டி 3சி 2எஸ் | 95 | 15 |
| வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி | 6டி 1சி 1எஸ்<br>5டி 3சி<br>5டி 2சி - 3 | 109 | 64 |
| காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் | 2டி 3சி 1எஸ் | 25 | 01 |
| மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை | 3டி 3சி 2எஸ்<br>3டி 4சி | 40 | 11 |
| மானிப்பாய்மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை | 3டி 3சி 1எஸ்<br>2டி 5சி - 5 | 169 | 69 |
| இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம் | 4டி 3சி - 2<br>3டி 4சி - 2<br>2டி 3சி 1எஸ் - 3 | 43 | 25 |
| இளவாலை கன்னியர்மட மகா வித்தியாலயம் | 6டி 1எஸ்<br>4டி 2சி 1எஸ்<br>2டி 5சி<br>2டி 3சி 2எஸ் | 114 | 28 |
| சில்லாலை றோ. க. த. க. பாடசாலை | 5டி 3சி<br>1டி 3சி 2எஸ்<br>4சி 2எஸ் | 21 | 05 |
| மானிப்பாய் புனித அன்னம்மாள் றோ: க. த. க. பாடசாலை | 6சி 1எஸ்<br>4சி 3எஸ்<br>4சி 2எஸ் | 16 | 08 |
| மானிப்பாய் இந்துக் கல்லூரி | 6டி 1சி 1எஸ்<br>4டி 3சி 1எஸ்<br>4டி 2சி 1எஸ் | | |
| சிறிசோமஸ்கந்தா புத்தூர் | 4டி 3சி -1<br>3டி 3சி - 1 | 113 | 30 |
| அச்சுவேலி மத்தியமகா வித்தியாலயம் | 6டி 2எஸ் - 1<br>5டி 2சி 1எஸ் - 1<br>4டி 2சி 1எஸ - 2 | 185 | 43 |
| அச்சுவேலி சென்திரேசா மகாவித்தியாலயம் | 3டி 4சி - 1<br>2டி 2சி 1எஸ் - 1 | 91 | 19 |
| உரும்பிராய் இந். கல்லூரி | 4டி 4சி - 1 | 140 | 40 |

## அதிபர்கள் கூட்டம்

தெல்லிப்பழை கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு மருதனார்மடத்தில் உள்ள யூனியன்கல்லூரியில் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

### தேசியத்

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, ஜெனஷ்ணி - திருவினங்கம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, உடுவில் கோட்டம்

ரஜித்தா - காந்தரட்ணம், உடுவில் மகளிர் கல்லூரி, சுதாஜினி - புலேந்திரன், உடுவில் மகளிர் கல்லூரி,

சங்கானைக் கோட்டம்

நிலாணி - இராமச்சந்திரன், வட்டு: யாழ்ப்பாணக் கல்லூரி செல்வராஜா - தவேந்திரன், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி காரானசிங்கம் - சுகிரன் மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஜராங்கனி - யோகராஜா, மானிப்பாய் மகளிர் கல்லூரி,

கோப்பாய்க் கோட்டம்

ஜெயமாலா - தர்மலிங்கம், அத்தியார் இந்துக் கல்லூரி, சிவபாக்கியநாதன்-ஸ்ரீசோதி, கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரி.

தெல்லிப்பழைக் கோட்டம்

திருச்செல்வி - திருவாதவூரன், யூனியன் கல்லூரி, சர்மிளா - சண்முகலிங்கம். யூனியன் கல்லூரி,

கிளிநொச்சி வலயம்
பளைக் கோட்டம்

அபிராமி - ஆறுமுகம் பளை ம. வி. பொன்னுத்துரை - சுதன், பளை, ம. வி.

ஊர்காவற்துறைக் கோட்டம்

பெலிசியா பெலிக்ஸ் - ஆல்பேட், ஊர். புனித மரியாள் மகளிர் வி. புவனச்சந்திரன்- ரவீந்திரன், யாழ்ரன் கல்லூரி

வேலணைக் கோட்டம்

பரமானந்தன் -சாயிநேசன் புங்குடுதீவு ம. வி., பரஞ்சோதி - குணதீபன், சோ. வைத்திலிங்கம் து. ம. வி.

கரவெட்டிக் கோட்டம்

சர்மிளா- தவேஸ்வரன் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி சராந்தினி-ஜெகநாதன் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

பருத்தித்துறைக் கோட்டம்

கந்தசாமி-யோகநாதன் ஹாட்லிக் கல்லூரி இலம் ராஜாராம் ஹாட்லிக் கல்லூரி

மருதங்கேணிக் கோட்டம்

இளமலர்-வேலுப்பிள்ளை ஆழியவளை சீ. சீ. த. க. பா. துரைசிங்கம்- விஜயபாஸ்கர் ஆழியவளை சீ. சீ. த. க. பா

சாவகச்சேரிக் கோட்டம்

சாமுவேல்- துஷ்யந்தன் சாவகச்சேரி இந்துக் கல்லூரி சுபாஜினி-இராசதுரை சாவ

## தமிழ்த்தினவிழா

அளவெட்டி அருணாசலம் வித்தியாலய தமிழ்த்தின விழா நாளைவெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அதிபர் கைலாசநாதன் தலைமையில் நடைபெறும்.

### புக்காரா

பலம் இடம்பெற்றது. பலாலிப் பகுதியிலிருந்து வந்த இவ் விமானம் ஆனைக்கோட்டை பகுதியையும் சுற்றி நோட்டமிட்டதாக தெரிகிறது. (86)

## கண்டெடுப்பு

இரத்தினசபாபதி - இரத்தினேஸ்வரி, ஞானராஜா ஞானதீபன் என்பவர்களுடைய அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதற்குரியவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் அலுவலகநேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆதரவற்ற சிறார்களின் வளர்ச்சி நிதிக்கான

## "ராசி சில்க்ஸ்"

ஆதரவில் மின்னொளியில் மிளிரப்போகும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி - 1994

இடம்:- பரியோவான் கல்லூரி மைதானம்
காலம்:- 07 . 04 . 1994
நேரம்:- பி. ப 7.00 மணி

சிறப்பு விருந்தினர்:- திரு. க. குணராசா
(பிரதேச செயலாளர், யாழ்ப்பாணம்)

பங்குபெறும் அணிகள்:
(1) சென்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் பல்கலைக்கழக விளையாட்டுக் கழகம்
(ii) அம்பாள் விளையாட்டுக்கழகம் எதிர் மாவத்தை விளையாட்டுக் கழகம்

பிரவேசம்:- ரூபா 25.00

ஃ பந்து விளையாட்டை ரசிப்பதுடன் நிந்தைக்கினிய சிறார்களுக்கும் உதவுங்கள்

(சி9041)

சுன்னாகம் வணிக மன்ற (வர்த்தகர் சங்க)

## அறிவித்தல்

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட அனைத்து வணிக ஸ்தாபனங்களும் எதிர்வரும் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு 9ம், 10ம் திகதிகளில் வியாபாரம் செய்வதற்கு அனுமதி அளிக்கப்படுகின்றது. அத்துடன் இத்தினங்களில் வியாபாரம் செய்யும் வணிக நிலையங்கள் மேலதிக கொடுப்பனவாக ரூபா 150.00 ஊழியர்களுக்கு கொடுத்து அவர்களிடமிருந்து உறுதிச்சீட்டு பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர்
வர்த்தக சங்கம்
(சி/9037) சுன்னாகம்.

## மரண அறிவித்தல்கள்

### திரு. கஸ்பார் அந்தோனிப்பிள்ளை

சென் ஜேம்ஸ் ராணி வாசா இளவாலையைச் சேர்ந்த திரு. கஸ்பார் அந்தோனிப்பிள்ளை காலமானார். அன்னார் மேரி யோசேப்பின் அன்புக்கணவ

விண்ணப்ப முடிவு திகதி 22 - 04 - 1994

சபையினால் கோரப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் "செயலாளர்" யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை, இல. 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். என முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

பதில் செயலாளர்
யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவு சபை
யாழ்ப்பாணம். 05-04-1994

(சி-9036)

# கலை வர்த்தக கல்லூரி
## (C. C. A.)

வெலிங்டன் சந்திக்கருகாமை,
யாழ்ப்பாணம்.

## கலை வர்த்தக வகுப்புக்கள்
## G. C. E A/L - 96

ஆரம்பம்: 09-04-94
காலை 8 மணி
சனி, ஞாயிறு வகுப்புக்கள்

ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பொருளியல் | திரு. உதயன் |
| கணக்கியல் | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | திரு. இரட்ணம் |
| அளவையியல் | திரு: சயந்தன் |
| இந்துநாகரிகம்) | |
| இந்துசமயம் ) | திரு. ஜோதீஸ்வரன் |
| புவியியல் | திரு. வேலா |
| தமிழ் | திரு. தங்கராஜா |
| அரசியல் | திரு. பஞ்சு |
| கிறிஸ்தவநாகரிகம் | திரு. நோபேட் |

குறிப்புக்கள்:
(1) மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளதால் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்
(2) மாதாந்த பரீட்சை மூலம் மாணவர் திறமை மதிப்பீடு செய்து வழிநடாத்தப்படும்.

(கி-9034) -நிர்வாகி

| | | | |
|---|---|---|---|
| உரும்பிராய் இந். கல்லூரி | 4டி 4B - 1 | 140 | 40 |
| வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் | 6டி 2B - 2 | 124 | 43 |
| அருணோதயாக் கல்லூரி | 4டி 2சி 2எஸ் - 2<br>3டி 3B 1எஸ் - 1 | 176 | 39 |
| கட்டுவன்புலம் ம. வித். | 1டி 4சி 1எஸ் - 1 | | |
| மல்லாகம் மகா வித்தியாலயம் | 4டி 3B 1எஸ் - 1<br>4டி 2சி 1எஸ் - 2<br>3டி 5சி - 1 | | |
| அளவெட்டி அருணாசலம் மகாவித்தியாலயம் | 2டி 4சி 1எஸ் - 1<br>1டி 2சி 2எஸ் - 1 | | |

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம
(வரையறுக்கப்பட்டது) சுன்னாகம்

# அறிவித்தல்
## பயிலுநர் இலிகிதர் பதவி

மேற்படி பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை:
க.பொ.த. (சாதாரண) தரத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம், தூயகணிதம், தமிழ்மொழி என்பவற்றினை உள்ளடக்கியதாக ஆறு (6) பாடங்களிலான சித்தியும், கூட்டுறவுப்பணியாளர் சாதாரண தரப் பத்திரமும்-

(2) விசேட தகைமை-
கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) பத்திரம்.

(3) வயது-
விண்ணப்ப முடிவு திகதியன்று 20 வயதுக்குக் குறையாமலும், 40 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(4) விண்ணப்ப முடிவு திகதி: 25.04.94

விண்ணப் பப்படிவங்களையும், ஏனைய விபரங்களையும் ரூபா 10/- செலுத்தி வேலை நாட்களில் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்.

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
04.04.94

(கி-9040)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி
சுபாஜினி-இராசதுரை சாவகச்சேரி இந்துக் கல்லூரி

## யாழ். போதனா

பாதிக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவர்களுக்கும் மட்டுமே இப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. மேற்படி நோய் குறித்த பரிசோதனையை மேற்கொள்ள விரும்பவர்கள் இனிமேல் யாழ் போதனா மருத்துவமனையில் பெற்றுக்கொள்ளலாம் என மருத்துவ மனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி)

## மாத்தளை

தலைவரான ரஞ்சித் அலுவிகாரவே இவ்வாறு இராஜினாமாசெய்தவராவார் இவர் கப்பல் போக்குவரத்து அமைச்சர் அலிக் அலுவிகாரவின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது-

இதனால் மத்திய மாகாணத்தின் ஐ. தே. கவின் கட்டமைப்பில் பெரும் பிளவு ஏற்பட்டுள்ளமையை உணர முடிகிறது என கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன-

# புதிய உயர் கல்லூரி
(ஆரியகுளம் சந்தி)
யாழ்ப்பாணம்.

## O/L
## DAY CLASSES

பகல்நேர வகுப்புக்கள்
ஆரம்பம்;
11-04.94 திங்கள்
காலை 8-00 மணி
(வகுப்புக்கள் 4நாட்கள் நடைபெறும்)

(கி-9033)

சென் ஜேம்ஸ் ராணி வாசா இளவாலையைச் சேர்ந்த திரு. கஸ்பார் அந்தோனிப்பிள்ளை காலமானார். அன்னார் மேரி யோசேப்பின் அன்புக்கணவரும், ஜெயராணி, கிளாறின்றோசலீன், மேரிமகிறேற், மேரிஇமெல்டா, மேரி எலிசபேத், திறினிற்றி, செலன் டெய்சி(இத்தாலி), யேசுரட்ணம், யோண் மறீன்(இத்தாலி), ஞானச்சந்திரன் ஜெரட்ஸ்ரீயன்(இத்தாலி), மரியறட்ணம்ஆகியோரின் அன்புத்தகப்பனும், அதிரியானந்தம், லோகநாதன், குணசிங்கம், ஜேசுநேசன், ஜீவரட்ணம், ரஜேஸ்வரி, கொண்சீலி, கொணிசி, சாந்த மேரியின் அன்பு மாமனாருமாவார். அன்னாரது பூதவுடல் நவாலி சோமசுந்தரப்புலவர் வீதி, இல்லத்தில் இருந்து 7. 4. 94 இன்று காலை நல்லடக்கத்திற்காக இருதய ஆண்டவர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியோடு நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்
மரியறட்ணம் (மகன்)
(சுதா)

(7955)

திருமதி
# தெய்வானைப்பிள்ளை கணபதிப்பிள்ளை

திருமதி தெய்வானைப்பிள்ளை கணபதிப்பிள்ளை 6. 4. 94-ல் காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்ற கணக்காளர் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், பகவதி, லக்சுமி, சரஸ்வதி, பாலச்சந்திரா (ஓமான்), தங்கரட்ணம் (டிரக்டர் மணியம் இன்ஸரிரியூட்), ஞானச்சந்திரா (கனடா), சறோஜினியின் அருமைத் தாயாரும், கணேசமூர்த்தி (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்), நடேசன் (ஓய்வுபெற்ற முகாமையாளர் H. N. B ), சாம்பசிவம் (ஓய்வுபெற்ற நிலஅளவை உதவி அத்தியட்சகர்), முத்துராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலம் சென்ற சுப்பிரமணியம்(ஆசிரியர்), நீலா, பாலச்சந்திரன் (சவூதி அரேபியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலம் சென்ற கந்தையா, திருமதி நாகலிங்கம், திரு. நவரட்ணம், திருமதி ஏரம்பு, திருமதி நடராஜா, திரு. கார்த்திகேசுவின் சகோதரியும், Dr. சுபகுமார், Dr. விஜயகுமார், நித்தியகுமார்(லண்டன்), கஜமுகன் (மருத்துவ பீட மாணவன்), தேவகி, திருமதி ரஜினி பிரபாகரன், திருமதி வதனி நடராஜசுந்தரம், ஜயாளினி, கணேருபன், சௌமினி, ஜயாபரன், மணிமேகலை, பகீரதி, ரவி, சிவந்தி, சசீதரன், நிரஞ்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். இன்று 7. 4. 94 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஈமக்கிரியைகள் நடைபெற்று ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
இ. சாம்பசிவம்
(மருமகன்)

திகிரி,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை

(7962)